
பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணு ஒன்று

4 ERODE





| | | |
|---|---|---|
| வருட் சந்தா முன் பணம் | ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | ... | ரூ 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, | ... | ரூ 4—0 |

[வாரப்பதிப்பு]

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
தனி விகிதமும் உண்டு.

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-ஹூ ஐப்பசி-மீ 22 உ (7—11—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 28.



## உண்மையான கதர்

கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சாக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமானவிலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,

காங்கிரஸ் கதர் போர்டுகாரியதரிசி

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,

ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## கதர்! கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்

அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

## சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், உச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,

A. முருகேச முதலி.

No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.

ஊத்துக்குளி S. I. Ry.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916-ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா

மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,

மைலாப்பூர்-மதருஸ்.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,

முத்துசாமி செட்டியார்,

கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.


கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,

கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,

பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,

(திருப்பூர் மார்க்கம்.)

இனும்! இனும்!!
டேபில் டயம்பீஸ் இனும்!!!



(திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ்.)

எங்கள் 22 காரட் ரோல்டு கோல்டு "கோல்டன்" அழகிய கைக்கடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின்பேரில் வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனுமாக அனுப்பப்படும். இரண்டுக்கும் ஐந்து வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள். இனும் டைம்பீஸுடன் ஷ ரிஸ்டு வாட்சு விலை ரூ. 7. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நண்பர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்ப வேண்டும். விலாசம்:—

தி பான்ஸி வாட்சு அவுஸ்,
15-A பீட், அண்ணா பிள்ளைத் தெரு,
மதராஸ்.

## திருச்செங்கோடு தாலூகா ஆதித்திராவிட மஹா சபை.

———:0:———

25—5—26தேதி சேலம் ஆதி திராவிட ஹாஸ்டலில் சேலம் ஜில்லா ஆதி திராவிட மஹாஜன சபை பிரசிடெண்டு ஸ்ரீமான் ஆர். வரதப்பன் அவர்கள் தலைமையின் கீழ் கூடி, சேலம் ஜில்லா ஆதிதிராவிட மஹாஜன சபைக்கு இச்சபை கிளையாக இருக்க வேண்டுமென்றும் திருச்செங்கோடு தாலூகாவிலுள்ள ஆதிதிராவிடர் 2அணுச் செலுத்தி மெம்பராகச் சேரவேண்டும் என்றும், நிர்வாக அங்கத்தினர் தீர்மானிக்கிற கிராமத்தில் கூட்டம் கூட்டவேண்டுமென்றும் கீழ்கண்டவர்கள் அதிகாரிகளாக இருக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஸ்ரீமான்கள் ஆர். சீரங்கன் பிரசிடெண்டு எஸ். கந்தசாமி காரியதரிசி எஸ். வேலாயுதம் பொக்கிஷதார் எஸ். மாரிமுத்து, கே. காளி. எம்.கே. கிருஷ்ணசாமி எஸ். சொக்கநாதன் இந்நால்வரும் நிர்வாகிகள் என மாப்பரை ஸ்ரீமான் எஸ். கந்தசாமி (காரியதரிசி) அறிவிக்கிறார்.

———

5000 புத்தகம் இனும்.
"செல்வக்களஞ்சியம்."

இது ஒரு உயர்தரமான மாதப்பத்திரிகை. இதில் தேகசுகம், நீண்ட ஆயுள் பெறும்வழி, குடும்பவைத்தியம், அருமையான மருந்து முறைகள், புதுவியாபாரங்கள், பணந்தேடும் வழிகள், புதுக்கைத் தொழில்கள், சோப்புசெய்யும் முறை, சர்ப்பத்துகள், வாசனை முதலிய புதிய தொழில் முறைகள், தெய்வவழிபாடு, பல்வகை இன்ப நிலைகள் பற்றியன வெளிவரும்.

ஆண்டு கையொப்பத்தொகை ரூபாய் 1.
தபால் செலவு இல்லை.
வெளிநாடுகளுக்கு ரூபாய் 1—4—0
தனிச்சுவடி விலை அணு 2.

இந்தப்பத்திரிகையைப் பார்க்க விரும்புவோர்க்கு முதலில் ஒரு சுவடி இனுமாக அனுப்புகிறோம். உங்கள் முழு விலாசத்தைத் தெளிவாக எழுதவேண்டியது.

எமதுவிலாசம்:— நூற்பதிப்புத்தலைவர்,
"செல்வக்களஞ்சிய" நிலையம்,
மேலைக்கோபுர உட்புறம், மதுரை.

"ஆனந்த விகடன்"

இதில் பல அருமையானதும் விடாநகைப்பைத் தருவதுமான விகடங்களும் விசுடத்தேவாரம், திருவர்சகம், திருபுகழ் முதலிய அநேகப் பாடல்களும், விகடக் கதைகளும், ஞானந்தரும் வியாசங்களும், பலவகை குறிப்புகளும், "முத்தாம்பாள் அல்லது மோகனவடிவு" என்னும் தொடர்பு காவலும், பஞ்சாங்கமும் அடங்கியுள்ளது. இதை ஒரு தரம் வாசித்தவர்கள் மறுபடியும் வாசிக்காதிருக்கமாட்டார்கள்.

வருட சந்தா ரூ. 2, வெளிநாட்டிற்கு ரூ. 2-8-0
1 அணு ஸ்டாம்பு அனுப்ப மாதிரி இனும்.
[மாத சஞ்சிகை] ஆனந்த விகடன், ஆபீஸ்.
சௌகார் பேட் போஸ்டு, ஜி. டி. மதராஸ்.

சரீர மர்ம சாஸ்திரம்.

(ஓர் மானிட மர்ம நூல்.)

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது ஸ்தானங்களின் அமைப்பும், சம்சார சுகம் குடும்ப ரஹசியம், மணவாழ்க்கை மர்மம், அடங்கியது. கல்யாணமானவருக்கும், கல்யாணமாகாத சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல்.



64 படங்களுடன் 200 பக்கங்கள் பெரிய புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1.

மாணிக்க விலாஸம் பிரஸ்,
அருணசல முதலி வீதி, மதராஸ்

வில்வாதி இலேகியம்.

பித்த வாயுவுக்கும் அஜீரணத்துக்கும்.

ஆகாரம் ஜீரணமாகாமல் ஏற்படும் வயிற்றுப் பிசம், வயிற்றுவலி எப்பம், மார்நோய், பக்கநோப் முதலியவைகளை மூன்று பொழுதில் நீக்கக் கூடியது. பத்தியமில்லை.

40 வேளை சாப்பிடக்கூடிய இலேகியம் ரூ. 1—8—0.

கீழ்காய் நெல்லித் தைலம்.

இத் தைலத்தை வாரம் இருமுறை தலை முழுகுவதனல் மேக, பித்த, உஷ்ணங்களால் ஏற்படும் கண்ணெரிச்சல், கை கால் எரிச்சல், மயக்கம், தலைவலி, மயிர் உதிர்தல் முதலியவைகள் நீங்கும். மூளைக் குளிர்ச்சியும் கொழுமையையும் உண்டாக்கும். நாள்தோறும் சிகையில் தடவி சீவிக்கொள்ளலாம்.

கீழ்காய் நெல்லித் தைலம்
8 பலம் டின் 1-க்கு ரூ. 1—4—0
ஷ டின் 3-க்கு ரூ. 3—4—0
வி. பி. தபாற் செலவு வேறு.

எம். சி. நடேச வைத்தியர்,
சுதேச ஔஷதசாலை,
கு. மேல வீதி, தசகும்பகோணம்.

ஏதுவேண்டும்?

| | |
|---|---|
| மணவாழ்க்கையின் மர்மங்கள் | ரூ. 2—4 |
| கர்ப்ப சாஸ்திரம் | 1—8 |
| மனேவசிய சாஸ்திரம் | 1—8 |
| ரதி சாஸ்திரம் | 1—4 |
| ஸ்திரீ புருஷ ரகசியம் | 1—0 |
| சதிபதிகளின் மர்மம் | 1—0 |
| சரீர மர்ம சாஸ்திரம் | 1—0 |
| ரதிமதன சிங்கார ரஹஸ்யம் | 1—0 |
| மதனாதி ரஹஸ்யம் | 1—0 |

இன்னும் எல்லாவித தமிழ்ப் புஸ்தகங்களும் எம்மிடம் கிடைக்கும். வி. பி. சட்டமில்லாதவெளிநாட்டு நேயர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்பவேண்டும்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

மதனகேசரி.

இணையற்ற மகா தாதுபுஷ்டி லேகியம்.

இது அபார சக்தி வாய்ந்தது. தேகம் வலுக்கும் மூளை, இருதயம், குண்டிக்காய்களுக்கு வலுவேற்றும். நரம்பு ஸ்தானங்களைப் பலப்படுத்தும். அபரிமிதமான தாது விருத்தி, இரத்த விருத்தி, போக சித்தி உண்டாக்கும். தாது புஷ்டிக்கு நிகரற்ற மகா உயர்ந்த சாலாமிசிரி சஞ்சீவி இதுவே.

1 டின் ரூ. 3. வி. பி. அணு 5.

பிரஜானுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.

பிரமேககுல சம்ஹாரி.

சகல வெள்ளை வெட்டை, நீர்க்கடுப்பு, தந்தி மேகம், ரணம், அரை சிலிப்பு, அண்ட வாதம், கைகால் கருப்பு, கிரந்தி, தடிப்புகள், திமிர் முதலியவைகளை ஐந்தே தினத்தில் தீர்க்கிறது. புட்டி 1-க்கு ரூ. 2.

மதன கோலாகல ரசமணி மாத்திரை

மறதி, அசதி, சோம்பல், இடுப்புவலி இவைகளை நீக்கி ஞாபக சக்தி போகசக்தி, வீரியவிர்த்தி முதலியவைகளை யுண்டாக்கும். இரவில் சாப்பிட சிங்க வீரியம்போல் தாதுபுஷ்டியளிக்கிறது. குளிகை 50 ரூ. 4. 25 ரூ. 2

ஸ்ரீராமபிரான் வைத்தியசாலை, திருச்செங்கோடு (S. 1)

## காஞ்சீபுரத்தில்

# ஸ்ரீமான் எ. ராமசாமி முதலியாரின்

## விளக்கவுரை.

### ஸ்ரீமான் முதலியாரின் பெருந்தன்மையும்
### ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, எம். கே. ஆச்சாரியாரின் இழிதன்மையும்

**கா**ஞ்சீபுர வாசிகளே! ஒரு மாதத்திற்கு முன் உங்கள் முன்னே சில வார்த்தைகள் பேசிவிட்டுச் சென்ற பிறகு, மீண்டும் இன்றைக்கு உங்கள் எதிரே நிற்கும்படி நேரிட்டதற்காக மகா சந்தோஷப்படுகிறேன். நான் அன்றைக்குப் பேசிய விஷயங்கள் உங்கள் ஞாபகத்திலிருக்கலாம். அப்பொழுது நான் எந்தப் பார்ப்பனரையாவது இழித்துக் கூறியதுண்டா? அப்படியிருக்கச் சில நாளைக்குமுன் இங்கே வந்த எனது நண்பர் சத்தியமூர்த்தி ஐயர் அவர்கள் நான் இங்கிலாந்திற்குச் சென்றதாகச் சொல்வதெல்லாம் உண்மையானாலும் "அதனால் என்ன பயன்? ராமசாமி முதலியாரைச் சீமையில் மதிப்பவர் யார்? தெருவில் வேடிக்கையாக லண்டனில் திரிந்து வந்தாரே ஒழிய வேறு என்ன செய்தார்" என்றுகேட்டாராம். ஒரே ஒரு சமயத்தில்தான் நான் இங்கிலாந்தில் பொதுக் கூட்டத்தில் பேசும்படியான சந்தர்ப்பம் நேரிட்டதென்றும், அதுவும் அவராலேயே கிடைத்தபாக்கியமென்றும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி உங்கள் எதிரே சொன்னதாகக் கேள்விப்படுகிறேன். அப்படியே இருக்கட்டும். நண்பர் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியும் இந்தியர் நானும் இந்தியன்; ஆனால் நான் வேறு கட்சி அவர் வேறு கட்சி. நான் பார்ப்பனரல்லாதான் அவர் பார்ப்பனர். அப்படியிருந்தும் நாங்கள் இங்கிலாந்திற்குச் சென்றிருந்தபோது அவருடைய அழைப்புக்கிணங்கி பேதங்களையெல்லாம் பாராமல் இருவரும் ஒரே மேடையில் பிரசங்கம் செய்தோம். இது உண்மைதான். இங்கிலாந்தில் பொதுக்கூட்டத்தில் பேசுவதால் ஒரு பிரயோசனமும் கிடையாது. அந்தப் பேச்சை பத்திரிகைகள் பிரசுரிப்பதுமில்லை, ஆனால் இந்தமாதிரி முக்கியமான விஷயங்களைப்பற்றி ஆங்கிலேயரிடம் பேசவேண்டுமானால் அதற்கு ஒரேவழிதான் உண்டு. ஆங்கிலேயர் வழக்கமென்னவென்றால் டீ பார்டி வைத்து அதில் மேஜையில் உட்கார்ந்து சிற்றுண்டி அருந்துங்காலத்தில்தான் ஐக்கிய விஷயங்களைப் பேசுவார்கள். முற்காலத்தில் கோபாலகிருஷ்ண கோகலே அவர்களும் இந்த முறையைத்தான் கையாண்டிருக்கிறார். ஆகையால் நானும் இந்த உபாயத்தால்தான் நமது விஷயங்களை சாதிக்கமுடியுமென் எண்ணினேன். எனக்கு அநேக தேக்கச்சேரிகள் வைக்கப்பட்டன. பார்லிமெண்டு மெம்பர்களும் கானாட்டுக் கோமான் முதலிய அரச குடும்பத்தினரும் வைத்த விருந்துகளுக்கு எனக்கு வந்திருந்த அழைப்புப் பத்திரங்களில் சுமார் 30வரையில் இதோபடித்துப் பாருங்கள். அந்தத்தேக்கச்சேரிகளில்தான் எனது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் முதலிய எண்ணங்களை பார்லிமெண்டு மெம்பர்களோடும் பல பிரமுகர்களோடும் வெளியிட்டு அவர்களும் ஒத்துக்கொள்ளும்படி செய்தேன். இதுதான் நான் இங்கிலாந்தில் உலாத்திவந்தது.

நண்பர் சத்தியமூர்த்தி அவர்கள் மற்றொரு சமயம் இங்கிலாந்திற்குப் போயிருந்தார். அப்போது இந்தியாவிற்கு ஒரு சிறிது நன்மையும் செய்யக்கூடாதென்று வாதாடி பிரசாரம் செய்து வருகின்ற "மார்னிங்போஸ்டு" என்ற பத்திரிகையானது இந்தியாவிற்கு சீர்திருத்தம் கொடுத்தது தவறுஎன்றும், அவர்கள் அதைச் சரியாகப் பரிபாலிக்க முடியாதென்றும் ஆகையால் அதை பிடுங்கிக்கொண்டு 1920-க்குமுன் இந்தியா அரசாட்சி எப்படி இருந்ததோ அதேமாதிரி இருக்க வேண்டுமென எழுத, அதைக்கண்ட சத்தியமூர்த்தி ஐயர் அதை ஆமோதித்து மறுநாள் அந்தப் பத்திரிகைக்கு அவர் எழுதிய கடிதத்தைப் பாருங்கள். (என்று அந்தப் பத்திரிகையிலிருந்து வாசித்துக் காண்பித்தார்) இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர்கள் தங்களுக்குள் எவ்வளவு பேதமிருந்தாலும் அதை இங்கே காட்டிக்கொள்கிறார்களா? அப்படியிருக்கநமது சத்தியமூர்த்தி ஐயர் "மார்னிங்போஸ்டு" சொன்னது சரியென்றும், சென்னையில் இந்த சீர்திருத்தத்தால் ஒரு கட்சியாரே ஆதிக்கம்பெற்று வருவதால் இந்த சீர்திருத்தம் இல்லாதிருப்பது நலமென்றும் சொல்வது அழகா? அதற்குச் சிலநாள் கழித்து நான் இங்கிலாந்திற்குப் போயிருந்தேன். அதே பத்திரிகை அப்போது தனது தலையங்கத்தில் இந்தியர்கள் திறமையற்றவர்களென்றும், சீர்திருத்தம் உடனே பிடுங்கிக்கொள்ளப்படவேண்டுமென்றும், கல்கத்தாவிலும் மத்திய மாகாணத்திலும் சீர்திருத்தத்தை பிடுங்கிக்கொண்டது சரியென்றும், இந்தியர்களுக்கு எல்லா வேலைக்கும் ஆங்கிலேயர் துணைவேண்டியிருக்கிறதென்றும் பலவாறாக எழுதியிருந்தது. அதை நான் கண்டித்து எந்த விதத்தில் இந்தியர்களுக்கு திறமை இல்லை என்பதை காட்டும்படிக்கும் எந்தெந்த பெருங்காரியங்களில் இந்தியர்கள் தவறி ஆங்கிலேயர் திருத்தியிருக்கின்றனர் என்று பலவிதமாகக் கண்டித்துத் நான் எழுதியிருக்கிறேன். (அந்தப் பத்திரிகையிலிருந்தே படித்துக் காட்டினார்) இப்படி கண்டித்ததின் பலனாக மறுநாள் அந்தப் பத்திரிகையானது தான் கூறிய எல்லாவற்றையும் வாபீஸ் வாங்கிக்கொள்வதாக எழுதியதுகண்டு சந்தோஷித்தேன். இப்படி எதிர்த்த நான்தான் கவர்மெண்டு ஸ்வீகாரபுத்திரனும் அதற்குத் தலையாட்டிய சத்தியமூர்த்தி ஐயர் கவர்மெண்டுக்கு முட்டுக்கட்டை போடுகிறவராம் (வெட்கம்) ஒரு சமயத்தில் சீமையில் மகாநாடு கூடினது உங்களுக்குத் தெரியும். அப்போது செலவிற்காக சென்னை மாகாணம் 3 லக்ஷம் கொடுக்கவேண்டுமென ஒருவர் தீர்மானம் கொண்டுவந்தார். அது அதிகமென்றும் ஒரு லக்ஷம் ரூபாய் போதுமென்றும் நான் தீர்மானம் கொண்டுவந்து அதை நிறைவேற்றினேன். இது இவ்வாறாக இந்த மகாநாட்டுக்கு இந்திய நாடகத்தைக் கொண்டுபோய்க் காண்பிக்க வேண்டுமென ஒருவர் ஐம்பதாயிரம் ரூபாய் கொடுத்தார். அதன்படியே ஒருவர் இங்கிருந்து டிராமா கம்பெனியை சீமைக்கு அழைத்துக்கொண்டுபோனார். நானும் அப்போது சீமையிலிருந்தேன். ஒரு நாள் நான் டிராமாவிற்குப் போனேன். அன்று நந்தனார் சரித்திரம் நடத்தப்பட்டது. அதில் சில பறையர்கள் வரும் மாதிரி சீன் இருந்தது. அதில் ஒருவன் கரி பூசிக்கொண்டும், ஒருவன் முழத்துண்டு கட்டிக்கொண்டும் ஒருவன் கள் குடித்தமாதிரி ஆடிக்கொண்டும் வரக்கண்டு எனக்கு வருத்தம் உண்டாய்விட்டது. இதை பார்த்தவுடன் ஆங்கிலேயருக்கு இந்தியாவைப்பற்றி என்ன அபிப்பிராயம் உண்டாகும்? இதனால் நந்தனார் சரித்திரம் கெட்டதென்று நான் சொல்லவில்லை. இந்த சரித்திரத்தை நமது நாட்டில் நடத்துவதற்கும் இங்கிலாந்தில் நடத்துவதற்கும் வித்தியாசம் உண்டு. இந்தியர் அதிலுள்ள பாட்டுச் சுவைக்கும் பக்திச் சுவைக்கும் விரும்பினவர்கள். ஆனால் ஆங்கிலேயருக்கு தமிழ் பாட்டின் சுவை என்ன தெரியும். பறையர்களைக் கண்டதும் இந்தியாவின் யோக்கியதையைப்பற்றி இழிவாகவும் கேவலமாகவும் பேசிக்கொள்ள ஆரம்பித்தனர். நான் கவலையோடு வீடுசென்றேன். இரவெல்லாம் தூக்கம் வரவில்லை. மறுநாள் இந்திய பொருட்காட்சிக்குத் தலைவராக இருந்த ஸ்ரீமான் விஜயராகவாச்சாரிக்கு டிராமாவை உடனே நிறுத்திவிடவேண்டுமென்றும் நிறுத்தாவிட்டால் இந்தியாவிலுள்ள மந்திரிகளுக்கு அறிவித்து இதை நிறுத்தும்படி ஏற்பாடு செய்வேன் என்றும் ஒரு கடிதம் எழுதினேன். உடனே டிராமாவானது நிறுத்தப்பட்டது. டிராமா கம்பெனி மறுநாளே இந்தியாவிற்கு மூட்டைகட்டி அனுப்பப்பட்டது. இம்மாதிரி பலபேர் இந்தியாவில் வேண்டாமென்று சொல்லவும் மீறி அழைத்துச்சென்றவர் நமது ஸ்ரீமான் கிருஷ்ணசாமி பாவலராகும். ஆகையால் அவருக்கு என்மீது கோபம் இருக்கவேண்டியது நியாயந்தான். அவரைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் ஒரு முக்கியமான விஷயம் உங்களைக் கேட்க விரும்புகிறேன். எனது நண்பர் எம். கே. ஆச்சாரியவர்கள் அங்கே உபந்யாசம் செய்தபோது நான் உண்மையான வேளாளனா என்று கேட்டாராம். இதைத் திருப்பி அவரை கேட்பதென்றால் வெகு நேரமல்ல. ஆனால் இங்கே கூடியுள்ள இவ்வளவு கௌரவக் கூட்டத்தின்முன் இந்த வார்த்தைகளைக் கூறுவது தகுதியல்லவென்றும் எனது அந்தஸ்துக்கும் தகாதென்றும் நினைக்கின்றேன். ஆனால் உங்களை ஒன்று கேட்கிறேன். இங்கு வேளாளர்கள் இல்லையா இந்த வார்த்தைகளை உங்கள் முன்னே எந்த தைரியம் கொண்டு சொன்னார். உங்கள் ரத்தம் அப்போது கொதிக்க

# மூர்த்தி ஸ்தல பூசையும் தீர்த்தயாத்திரையும்.

(கைவல்யசாமியார் எழுதுகிறார்)

இப்பொழுது நாம் கடவுள் திருப்திக்காகவென்று செய்துகொண்டுவரும் கருமங்கள் என்ன? அக்காரியங்களால் கடவுள் திருப்தியடைகிறாரா? அதனால் நமக்கு ஏதாவது பலனேற்படுகிறதா? என்பவைகளை கவனிக்க வேண்டியது நம்முடைய முதற் கடமையாக இருக்கிறது. நம்முடைய கஷ்டம் நீங்கவோ, சுகம் ஏற்படவோ, அல்லது நாம் கோரின காரியங்கள் கைகூடவோ, அல்லது பெண்ஜாதி சுற்றத்தார் இவர்கள் நமக்காக கோரிக்கொண்ட பிரார்த்தனையை முடிக்கவோ அல்லது சோதிடன், புரோகிதன் முதலானவர்கள் நமது நன்மைக்கென்று சொல்லும் பிராயச்சித்தங்கள் செய்யவோ, அல்லது புண்ணியம் அடையவோ, பாவந்தொலையவோ, பணச்செருக்கைக் காட்டவோ, அல்லது அக்கம் பக்கத்தார் நம்மைப்பற்றி பெருமையாக நினைக்கட்டும் என்கிற ஆசையாலோ நாம் இப்பொழுது செய்யும் கர்மங்கள் என்னவென்றால், பெரும்பாலும் திவ்விய ஸ்தல யாத்திரை தீர்த்த யாத்திரை, பிரார்த்தனை, பூசை, ஜெபதப ஓமம் முதலியவைகளே யாகும். இவையனைத்தும் கடவுளை வழிபடும் சமய ஒழுக்கங்கள் என்று சொல்லப்படும். உண்மையான சமய ஒழுக்கத்தின் தத்துவமென்னவென்றால்உள்ளன்புடன்எம்பெருமானது திருவடிகளிலே செய்யப்படும் நிர்மலமான பக்தியேயன்றி வெறும் வெளிச்சடங்குகளல்ல. நிர்மல பக்திக்கு சில தன்மைகளமைய வேண்டும். அவை வந்தடையவே வெளிச்சடங்கையு மமைத்தார்கள் முன்னோர்கள். இந்திரிய ஜெயமும், சத்திய வசனமும், தயாளமும், விஷயங்களிலுள்ள தோஷங்களை ஆலோசிப்பதும், அடக்கமும், பொறுமையும், ஆசையில்லாமையும், கணக்குள்ள ஆகாரமும், தேகத்தின் உபாதிகளை சகித்தலும், விஷயங்களை விலக்குதலும், மித வசனமும், இந்திரியங்களின் அடக்கமும், ஏற்படவே இந்த விதிகளும் கர்மங்களும் ஏற்பட் டிருக்கின்றன. எவனுக்கு எதுயெது பிரியமுள்ளதோ அவனுக்கு அதையதை சுகமென்று சொல்லுகிறார்கள். இஷ்டமிலாதது எதுவோ அதையே துக்கமென்று கூறுகிறார்கள். இஷ்டமாயிருப்பது எனக்குக் கிடைக்க வேண்டும். இஷ்டமில்லாதது எனக்கு வேண்டாம்.' என்னுமிவ்வாசையை நிறைவேற்ற கர்மங்களின் விதியானது நடைபெற்றிருக்கிறது. இஷ்டமும் அநிஷ்டமும் எனக்கு வேண்டாமென்ற இந்த நிலையை அடையவேண்டி ஞானத்தின் விதியானது நடைபெற்றிருக்கிறது. சாஸ்திரங் கூறியுள்ள கர்மவழிகள் ஆசையுள்ளவனைப் பற்றினவையாயிருக்கின்றன. இவ்வாசைகளி லிருந்து விடுபட்டவன் பரபிரம்மமான பொருளை யடைவான் சுகத்தை விரும்பும் மனிதன் பலவிதமான கர்ம வழியில் பிரவிர்த்தித்து நாகத்தை யடைவான். ஆசைக்கே கர்மங்களின் விதியானது நடைபெற்றிருக்கிறது. ஆசையற்ற மன முதலியவற்றைக் கொண்டு செய்யப்படும் கர்மங்களால் விளங்குகிறவனும், மனதில் பிரகாசமென்னும் சுத்தியை அடைந்தவனும், தர்மத்தில்பிரவர்த்தித்தவனும் மோக்ஷசுகத்தை விரும்பத் தக்கவனுவான் என்பவைகளே வேதத்தின் கருத்து. "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினவர்க்கு வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்று தாயமானவர் சொன்னதுமிதுவே. இந்துமதக் கருத்தே மோக்ஷத்தின் ஆசைக்கேகர்மங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன என்பது இப்பொழுது நாம் செய்யும் கர்மங்களானவை வழக்கத்தையும் பழக்கத்தையுமொட்டி அவர்கள் செய்தார்கள், நாமுஞ் செய்வோம் இவர்கள் செய்தார்கள் நீங்களுஞ் செய்யுங்கள் என்று செய்யப்படுகிறதே ஒழிய, பக்தியோ மனசுத்தமோ அடையவ் வழியிருக்கிறதா என்பதில் கவலையில்லை. இப்பொழுது நாம் செய்யும் காரியங்களாவன, காசிக்குப்போய் கங்கை கொண்டு வருவது, ராமேஸ்வரம் போய் நாகர் பிரதிஷ்டை செய்வது,திருப்பதிக்குக் காணிக்கை கொண்டு போவது, பழனிக்குக் காவடி எடுப்பது, ஸ்ரீரங்கத்தில் சட்டியரனை வாங்கி அக்கார அடிசில் படைப்பது, சிதம்பரத்தில் பவாடை போடுவது, இப்படி இன்னும் அனேக கோவில்களில் நெய்யும்பாலும் தேனும் கற்கண்டும் சீனியும் பதாம் முந்திரிப் பருப்பு திராட்சை பச்சை கற்பூரம் குங்குமம் புனுகு ஜவ்வாது சந்தனம் பனிநீர் முதலிய அநேகவித சாமான்களால் அநேகவித பட்சணங்கள் செய்து அங்கு திகட்டிக் கிடப்பவர்களான குருக்கள் அர்ச்சகர்கள் ஆழ்வார்கள் ஆச்சாரிகள் இவர்களைச் சாப்பிடச் செய்வதும் மற்றும இதற்காக வாங்கின சாமான்களில் கடைக்காரன் கொடுத்ததாகும். இவர்கள் திருடினதும்போக மிச்சசாமானில் பட்சண பலகாரமுதல் நிவேத்தியத்திற்கு செய்ததில் பாதியை முன்னமே திருடி மற்றதை சாமிக்குக் காண்பித்து உங்களிடம் பிரசாதமென்று கொடுக்க நீங்கள் அதிலும் பாதியை அவர்களை எடுத்துக் கொள்ளச் சொல்லி, 'இல்லை யில்லை பிரசாதம் தங்களுக்கே இருக்கட்டு மென்று அபிநயித்து யோக்யராக காண்பிக்க நடித்து மீத முக்காலு மெடுத்து பக்கத்திலிருக்கும் வேறு பக்த கோடிகளுக்கு சாமி பிரசாதம் பக்தியாக பிரதி பிரயோஜன மில்லாமல் வழங்குவதுபோல் வழங்கி புரோக்கர்கள் மூலமோ தாங்களாகவோ கொடுத்த பிரசாதத்திற்கு மறுபடியும் பணம் வசூல்பண்ணி விடுவார்கள். அபிஷேக பூசை அர்ச்சனைகளுக்கு தெக்ஷிணையில் தர்க்கமிலாமலிருந்ததே இல்லை. "சாமிக்கு அதை வைத்தோம் இதைப் படைத்தோம் எதை விட்டுவிட்டோம் உங்கள் பூசை சமயம் வேறு யாரையாவது விட்டோமா? எல்லாரையும் பிடரியைப் பிடித்துத் தள்ளவில்லையோ! கோவில் அதிகாரியின் கோபத்திற்கு பயந்தோமா? அவர்களுக்கு யேதாவது கோடுக்க வேண்டாமா? எல்லா ஞாயமும் தெரிந்த நீங்கள் கோவிலில் செட்டு பண்ணினால் காரியங்கள் நடக்குமா? நாங்கள் இவ்வளவு விசேடமாக சாமிக்குச் செய்திருக்கப்படாது. நீங்கள் பெரிய மனிதர்களானதால் மரியாதை தெரிந்து நடப்பீர்களென்று செய்து வைத்தோம். "அந்த செட்டியார் வந்தார் அவ்வளவு கொடுத்தார். இந்த மார்வாடி வந்தார் இவ்வளவு கொடுத்தார்" என்னும் விஷயங்களைக் கேட்டு நமக்கும் கோபம் வந்து 'உங்கள் அயோக்ய புத்தி உங்களைவிட்டுப் போவதில்லை. கோவிலுக்கு வந்தாலே உங்கள் இழவுக்கு மாரடிக்க யாராலாகு' மென்று வருத்தப்பட்டு கோப மினியும் அதிகம் வருகையில் பக்கத்திலிருப்பவர்கள் இவ்வளவு கஷ்டப்பட்டு யாத்திரை வந்த இடத்தில் இந்தப் பார்ப்பாரோடு தகராறு? எதற்கு? ஏதோ கொடுப்பதைக் கொடுத்துத் தொலையுங்களேன்; என்று சொல்ல, முகக் கடுகடுப்போடு அவன் கேட்பதை கொடுத்து முகத்தைச் சுளித்து கோவிலுக்குப் போன உற்சாகத்தையும் திருப்தியையும் விட்டு, மன சுத்தத்தையும் மறந்து சுவாமி பக்தியை அடியோடு, ஓட்டி தங்கி இருக்குமிடம் வந்து சேருகிறோம். அங்கும் விட்டபாடில்லை. வந்துவிட்டான் தரகன். ரயில்வே போர்ட்டர்கள் தொந்தரவு ரயில் நகர்ந்தால் தீரும். பிடரியைப் பிடித்துத் தள்ளுகிறவரையிலும் இவன் தகராறு தீருவதில்லை. வேடர்கள் சுற்றுமிடத்தில் ஏதாவது மிருகங்கள் அகப்பட்டுக் கொண்டால் பட்சாதாபமில்லாமல் எப்படிக் கொன்று பிச்சுப்பிடுங்கி சுட்டுத் தின்றுவிடுகிறார்களோ அப்படியே கோவிலுக்குள் வெள்ளை வேஷ்டியோடு ஒருவன் வந்துவிட்டால் மரியாதை ஞாயம் வெட்க முதலியவைகளில்லாமல் பிச்சுப்பிடுங்கி இருக்கிற பணத்தையெல்லாம் கொள்ளைகொண்டு விடுகிறார்கள். கோவிலென்பது வியாபாரக் கடையா? அல்லது ஒவ்வொரு இடத்திற்கும் பணம் கொடுத்து வேடிக்கை பார்க்கும் பீப்பிள்ஸ்பார்க்கா? தவிர நாம் அர்ச்சகர்களுக்கு ஏதாவது கொடுக்காவிட்டால் இவர்கள் காலக்ஷேபம் எப்படி நடக்கும் என்று சிலர் தர்ம நியாயம் பேசுவார்கள். ஒரு வழியில் அது நியாயம் என்று வைத்துக்கொண்டாலும் சீமை கமலங்களுக்கும் பெங்களூர் புடவைக்கும் இந்த காலத்து நாகரீகமான எல்லாவித சுகங்களுக்கும் ஆசைப்பட்டு பொருள் சம்பாதிக்கவா? இவ்வர்ச்சகர்களுக்கு சாஸ்திரம் விதித்திருக்கிறது? இவர்கள் இல்லற தர்மம் நடப்பதற்கும் நித்திய கர்மானுஷ்டங்களுக்கும் இவர்களுக்கு விடப்பட்ட மான்யமும் சம்பளமும் யாத்திரைவாசி தட்டத்தில் மனதாரப் போடும் காணிக்கைகளும் போதுமானதாயிருக்கும். சர்க்கார் உத்தியோகஸ்தர்களை உங்கள் சம்பளத்திற்குமேல் மேல் வரும்படியென்னவென்று கேட்பதுபோல், இவர்கள் பிழைப்புமாய் விட்டது. இவர்கள் மதப் படிப்பிலும் உலக அறிவிலும் கொஞ்சமும்

(இதன் தொடர்ச்சியை 13ம் பக்கம் பார்க்க.)

---

வில்லையா? நீங்கள் எனக்கு ஓட்டு கொடுக்கலாம் கொடுக்காமல் இருக்கலாம். ஆனால் கூட்டம் ஒழுங்காக நடக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டியது உங்கள் கடமையல்லவா?

மகா ஜனங்களே உங்களை இந்நேரம் காக்கவைத்ததற்காக மன்னிக்கவும் என்று சொல்லி நீண்ட கரகோஷத்தினிடையே தன்னிடத்தில் அமர்ந்தார். (திராவிடன்)

# வரப்போகும் சென்னை சட்ட சபைத்தேர்தலும், பார்ப்பனரல்லாதார் கடமையும்.

ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் சென்றவாரமும் இவ்வாரமும் திருச்சி, தஞ்சை கும்பகோணம், திருநெல்வேலி, முதலிய இடங்களில் செய்த சுயமரியாதைப் பிரசாரத்தில் நிகழ்த்திய சொற் பொழிவின் குறிப்பு.—

### சட்டசபை பார்ப்பனரல்லாதார்.

சகோதரர்களே!

இன்றைய விஷயம், வரும் சட்டசபைத் தேர்தலும் பார்ப்பனரல்லாதார் கடமையும் என்பதைத் தாங்கள் ஹாண்டுவிளம்பரமூலம் அறிந்திருப்பீர்கள். ஒத்துழையாமையில் நான் தொண்டு செய்துகொண்டிருந்த காலத்தில், இந்தத் தேர்தல், "பார்ப்பனரல்லாதார், என்கிற இரண்டு வார்த்தைகளையும் நான் பெரிதும் அநாவசியமாய்க் கருதி வந்ததோடு பொது மக்களிடையிலும், இவ்விரண்டிலும் கவலை செலுத்தாதீர்கள் என்றும் பிரசாரம் செய்து வந்தவன். ஆனால் மகாத்மாவின் ஒத்துழையாமைக் காங்கிரஸ் மறைந்துவிடவே, இவை இரண்டும் இப்போது லக்ஷியம் பெறத்தக்கவையாகிவிட்டன. மகாத்மாவின் காங்கிரசில் இருந்த கொள்கைகள் சட்டசபையை பஹிஷ்காரம் செய்யவேண்டியதாயிருந்ததாலும், பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற வித்தியாசமில்லாமல் மக்கள் ஒன்றுசேர்ந்து தொண்டு செய்யவும், அதனால் ஏற்படும் பலன் எல்லா சமூகத்தாருக்கும் சமத்துவமும், சமஉரிமையும் கிடைக்கத்தக்கதாகவும் இருந்ததாலும் அவற்றில் இவ்விரு வார்த்தைகளுக்கும் இடமில்லாதிருந்தது.

### பார்ப்பனர்கள்

தேசமக்கள் சமத்துவத்தையும் சமஉரிமையையும் அடைவதை ஒப்புக்கொள்ளமுடியாத நமது நாட்டுப் பார்ப்பனர்களும், சட்டசபையை பகிஷ்கரிப்பதனால் உத்தியோகமும் ஆதிக்கமும் பெறமுடியாதே எனப்பயந்த பார்ப்பனருமேதான், ஒத்துழையாமைத் திட்டத்தை அடியோடு காங்கிரசிலிருந்து எடுத்துவிட முயற்சி செய்தவர்கள்.

### நான் முன்னமேயே சொன்னேன்.

இம்முயற்சிக்கு விரோதமாய் தமிழ்நாட்டில் நான் எவ்வளவுதூரம் பிரயத்தனப்பட்டேன் என்பதும் ஒத்துழையாமைத் திட்டம் மறைவுபட்டால் தேசத்தில் மக்களின் ஒற்றுமை குலைந்து வகுப்புப்பிணக்குகளும் வகுப்புவாதமும் தலையெடுக்கும் என்றும் ஒத்துழையாமையின் பலனாய் பொது ஜனங்கள் கையில் இருக்கும் காங்கிரசு வக்கீல்கள் கைக்கும், செல்வவந்தர்கள் கைக்குமே போய்விடுமே அல்லாமல், பெரும்பான்மை மக்களாகிய ஏழைக் குடியானவர்கள், தொழிலாளிகள் முதலியோர்களுக்கு காங்கிரசில் எவ்வித ஸ்தானமும் இல்லாமல் ஏமாற்றப்படவேண்டிவரும் என்றும், தாழ்த்தப்பட்ட வகுப்பார்கள் விஷயத்தில் கவலை செலுத்தும் தன்மைபோய் உயர்ந்த வகுப்பார் என்கிறவர்கள் தங்கள் ஆதிக்கத்தை பலப்படுத்திக்கொள்ள உபயோகப்படுத்தப்படும் என்றும் வெளிப்படையாய் காக்கிநாடா காங்கிரசின்போது அங்குகூடிய ஒரு தனிக் கூட்டத்திலும் மற்றும் பல மாகாண மகாநாட்டின்போதும் பேசியிருக்கிறேன். நமது பார்ப்பனர் தேசபந்துதாசை வசப்படுத்திக்கொண்டு அவரால் நமது தமிழ்நாட்டில் பிரசாரம் செய்விக்கும்போதும் நான் ஊர் ஊராய்த்திரிந்து எதிர்ப்பிரசாரம் செய்துமிருக்கிறேன். கடைசியாய் பெல்காமிலும் மகாத்மாவினிடம் நேரிலேயே சொன்னதில் அவர் இன்னும் 3 மாதத்தில் இதை மாற்றி விடுகிறேன் என்று கூடச்சொன்னார். இவ்வளவும் நான் செய்தும் ஒத்துழையாமையை அழிப்பதிலும் மகாத்மாவை விலக்குவதிலும் நமது பார்ப்பனர் தாங்கள் செய்த பிரயத்தனத்தில் வெற்றிபெற்று தேசீய சபை என்கிற காங்கிரசையும் தங்கள் ஆதிக்கத்திற்கு ஆயுதமாயும் செய்து கொண்டார்கள். இதன் பலனாக நான் முன் சொன்னது போல் பார்ப்பனரல்லாதார் பார்ப்பனர்களால் பார்ப்பன ஆதிக்கத்திற்காக ஏமாற்றப்படவும் சமத்துவமும் சம உரிமையும் அடியோடு மறுக்கப்படவும் நேரிட்டது. நமது பார்ப்பனரின் பொய்மானும் காங்கிரஸ் என்னும் மாய்கைக்கு இனி நமது நாட்டில் கடுகளவு இடம் கொடுத்தாலும் அது பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கு மலையளவு கெடுதியைச் செய்வதோடு பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்கே குழிதோண்டியதாய்விடும்.

### நானே முன் அணியில் நிற்பேன்.

உண்மையில் காங்கிரசோ மற்ற எந்த சாதனமோ தேச மக்களுக்கு சுயமரியாதையையும் விடுதலையையும் அளிப்பதானால் மற்றெல்லோரையும் விட நானே காங்கிரசின் முன்னணியில் நிற்பேன் நாளைக்கும் காங்கிரசோ மற்றெந்த சாதனமோ எல்லாமக்களின் முன்னேற்றத் திற்கும் சமத்துவத்திற்கும் அநுகூலமாய் ஏற்பட்டால் எவ்வித ஆபத்து வருவதானாலும் நானே அதின் முன்னணியில் நிற்பேன்.

### அழிக்கப் பின்வாங்கமாட்டேன்.

அதுபோலவே பொது மக்களின் சுய மரியாதைக்கும், உரிமைக்கும், விடுதலைக்கும் ஆபத்தான இயக்கம் என்று எதையாவது நான் கருதினால் அதை அடியோடு அழிக்க கொஞ்சமும் பின் வாங்கமாட்டேன். எவ்வித பழியோ அபகீர்த்தியோ ஆபத்தோ வருவதானாலும் அவற்றைக் கொஞ்சமும் லக்ஷியம் செய்யாமல் என்னால் கூடியதைச் செய்துதான் தீருவேன்.

### நான் செய்த தொண்டு.

நான் பொதுவாழ்வில் உழைக்க ஆரம்பித்த பிறகு இக்கொள்கையையே என்னால் கூடியவரை அனுசரித்து வந்திருக்கிறேன். உதாரணமாக ஹோம்ரூல் கிளர்ச்சியின்போதும் ஈரோட்டில் நடந்த கொடித்தகராறில் நானே முன்னணியில் இருந்ததும் என் வீட்டில் கொடி கட்டினதும், ஜஸ்டிஸ் கக்ஷி ஆரம்பித்தகாலத்தில் அது "தேசத்துரோகமான கக்ஷி" என்று நமது பார்ப்பனர்கள் செய்த பிரசாரத்தில் ஏமாந்து போய் அதற்கு எதிராக சென்னை மாகாணச் சங்கம் ஏற்படுத்துவதற்காக கூட்டின முதல் கூட்டத்திற்கு என்னுடைய முழு ஆதரவையும் கொடுப்பதாகவாக்களித்து 1000 ரூபாய் தந்தியில் வாக்களித்து, அனுப்பியதும், அக்கூட்டத்திற்கும் முன்னணியில் இருந்து மகாநாடுகள் முதலியவை நடத்தியதும், உப அக்கிராசனாதிபதியாயிருந்ததும் பிறகு ஹோம்ரூல் கிளர்ச்சியில் உள்ள சில புரட்டுகள் வெளியானதும் அதை ஒழிப்பதற்கென்று "நேஷனலிஸ்ட் அசோசியேஷன்" என்பதாக சென்னையில் ஒரு தேசீய சபை ஸ்தாபித்த காலத்தில் அதிலும் முன்னணியிலிருந்து அச்சபைக்குத் தமிழ்நாடு காரியதரிசியாயிருந்ததும், மற்றும் அதற்கு பிறகும் முன்னும் தேசீய சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் (மணப்பூர்வமாய்) எவ்வித கஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் ஊழியம் செய்ததையும் நீங்கள் நேரில் பார்த்திருப்பீர்கள். அப்படிப்பட்ட ஒருவன் இன்று ஏன் தற்கால காங்கிரசு பார்ப்பனரல்லாத மக்களுக்கு ஆபத்து என்று சொல்லவந்திருக்கிறேன் என்பதை சற்று யோசியுங்கள். காங்கிரசால் வரும் பெருமையையோ சுயராஜ்யத்தையோ அடைய எனக்கு இஷ்டமில்லாததாலா? அல்லது சுயராஜ்யத்திற்கு விரோமாயிருந்தால் அரசாங்கத்தாரிடம் ஏதாவது பட்டம் பதவி அல்லது எனது மக்களுக்கு உத்தியோகம் முதலியவை பெறலாமென்றா? எனக்கு இனி எப்பேர்ப்பட்ட பட்டமும் கிடைக்காது; உத்தியோகமும் கிடைக்காது; எனக்குப் பிள்ளைகுட்டிகளும் இல்லை. மற்றபடி, ஜஸ்டிஸ் கட்சியாரால் ஏதாவது ஜீவனத்திற்கு ஆதாரமோ அல்லது கௌரவ உத்தியோகங்களோ அடையலாம் என்று நினைக்கிறேன் என்றாலோ நான் எல்லா உத்தியோகங்களும் பார்த்து ராஜீநாமா கொடுத்துவிட்டு ஒத்துழையாமைக்கு வந்தவன். ஆனரரி மேஜிஸ்ட்ரேட் ஒன்றரை வருஷத்தில் ராஜிநாமா கொடுத்தவன். தாலூகா போர்டு மெம்பர் இரண்டு தடவை ராஜிநாமா கொடுத்தவன். ஜில்லா போர்டு மெம்பர் 2 வருஷத்தில் ராஜிநாமா கொடுத்தவன். முனிசிபல் சேர்மென் பதவி ஒன்றரை வருஷத்தில் ராஜிநாமா கொடுத்தவன். ஆகவே, இனி எந்த உத்தியோகம் நான் பார்க்க ஆசை கொள்ளவேண்டும்? ஆசை கொண்டால், ஜஸ்டிஸ் கட்சி தயவில்லாமல் கிடைக்காதா என்பதை நீங்களே நடுநிலைமையிலிருந்து யோசித்துப்பாருங்கள். எனது தாலூகா தேவஸ்தான கமிட்டி பிரசிடெண்டாக மாத்திரம் இருக்கிறேன். ஆனால் இது சுமார் 15 வருஷத்திற்கு மேல்பட்டு பார்த்து வருகிற வேலையானதாலும் இதற்கு மற்

ருருவர் தயவும் வேண்டியதில்லை. ஆதலால் எதை உத்தேசித்து நான் காங்கிரசை வேண்டுமென்று குற்றம் சொல்ல நினைப்பேன் என்பதை நீங்களே யோசியுங்கள். ஆனால் நமது பார்ப்பனர்கள்

பார்ப்பனர் சொல்வதைக் கேளாதீர்கள்.

தங்களுடைய ஆதிக்கத்திற்கு அனுகூலமாய் உழைக்கிறவன் எவ்வித அயோக்கியனானாலும் அவனை தேசபக்தன் என்பார்கள். அவர்கள் நன்மைக்குக் கடுகளவு விரோதம் ஏற்படத்தக்கதாக எவராவது நடந்துவிட்டால் எல்லாப் பார்ப்பனர்களுக்கும் கம்பியில்லாத தந்தி போல் எல்லோருக்கும் ஏக காலத்தில் உதயமாகி எல்லோரும் கூடிக்கொண்டு தேசத்துரோகி தேசத்துரோகி என்று பயம்காட்டி விடுவார்கள்.

ஸ்ரீமான்கள் பாவலரும், குபில் சுந்திரேசரும், குப்புசாமி முதலியாரும், குழந்தையும், சக்கரவர்த்தி அய்யங்காரும் நமது பார்ப்பனர்கள் உதடுகளில் தேசபக்தர்களாய் உருளுவதும் லாலாலஜபதிராய் டாக்டர் வரதராஜலு, ராமசாமி நாயக்கர் முதலியோர்கள் தேசத் துரோகிகளாய் விளங்குவதும் இதன் தத்துவமேதான். ஆதலால் நீங்கள் இவை ஒன்றையும் லட்சியம் செய்யாமல் நான் சொல்லுவதை கவனமாய் கேட்டு எது சரி எது தப்பு என்பதாக உங்கள் புத்தியைக் கொண்டே நன்றாய் யோசித்துப்பார்த்து உங்களுக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அதை தைரியமாய்ச் செய்ய முன் வாருங்கள். குருட்டு நம்பிக்கைக்கோ பயங்கொளித் தனத்திற்கோ உங்கள் தனித்த சுய நன்மைக்கோ கட்டுப்பட்டு சொந்த புத்தியையும் பகுத்தறிவையும் பறிகொடுத்து விடாதீர்கள் என்று முதலில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

காங்கிரசால் பார்ப்பனர்களுக்கு ஏற்பட்ட நன்மை.

சகோதரர்களே!

காங்கிரஸ் என்பதை நமது நாட்டையும் இந்நாட்டிலுள்ள பெரும்பான்மையான நமது சமூகத்தையும் அழிக்கவந்த ஒரு அரக்கனென்றுதான் சொல்ல வேண்டும். காங்கிரஸ் என்கிற ஒரு விஷத்தன்மை நமது நாட்டில் ஏற்பட்டுப் பரவாதிருந்திருக்குமானால் முதலாவது நமது நாட்டில் அந்நிய ஆட்சி இவ்வளவு பலமாய் ஆதிக்கம் பெற்று இருக்காது. இரண்டாவது இவ்வந்நிய ஆட்சி பலமாய் ஆதிக்கம் பெறவும் அதற்கு ஒற்றர்களாயிருந்தும், அஸ்திவாரம்போலும் தூண்கள்போலுமிருந்தும் அவ்வந்நிய ஆட்சி இந்நாட்டிலிருப்பதாலேயே வாழக்கூடியவர்களான நமது பார்ப்பன ஆதிக்கமும் நமது நாட்டில் இவ்வளவுதூரம் வளர்ந்திருக்காது. இந்தப் பார்ப்பனர்கள் ஒன்று ஆற்றோரங்களில் காலை மாலைகளில் மூக்கைப் பிடித்து முணுமுணுத்துக்கொண்டிருந்துவிட்டு நம்மிடம் பிச்சை எடுத்து வயிறு வளர்த்துக் கொண்டிருக்கவேண்டும் அல்லது வேறு ஏதாவது ஒரு தேசத்துக்குப்போய் அத்தேச மக்களின்மேல் ஆதிக்கம் செலுத்த வேற்றரசர்களைக் கூட்டிக்கொண்டு வந்து வைக்க பிரயத்தனப் பட்டுக்கொண்டிருக்க வேண்டும். அப்படிக்கெல்லாம்இல்லாமல்சுவாமி கைவல்லியம் அவர்கள் சொல்லுவதுபோல் இப்போது பார்ப்பனப்பெண்களுக்கு வைர அட்டிகை, பட்டுப்புடவை, கால்ஜோடு, கைத்துவளி, மோட்டார்கார், பங்களாபீச்சுகாத்தும் புருஷர்களுக்கு 5000, 10000 சம்பளம் புல்குட்டு, சர், மகாகனம், மகாமகோபாத்தியாயர் முதலிய பட்டம், முதலாவது இரண்டாவது வகுப்பு வண்டி, பிரயாணம், ஐரோப்பா ஆஸ்திரேலியா தூது ஆகியதுகள் இப்பார்ப்பனர்களுக்கு கிடைக்க வழியேது? இவைகள் இவர்களுக்கு இவர்கள் பெரியோர் தேடிய சொத்தா ஜாதித்தொழிலா வேதக் கட்டளையா பாரம்பரிய அநுபவமா? என்பதை கவனித்தீர்களானால் நன்றாய் விளங்கும்.

காங்கிரசால் பார்ப்பனரல்லாதாருக்கு ஏற்பட்ட கெடுதி.

காங்கிரசு இல்லாதிருக்குமானால் பார்ப்பனரல்லாதார் நிலை இவ்வளவு கேவலமாயிருக்குமா? காங்கிரசுக்கும் பார்ப்பன ஆதிக்கத்திற்கும் முன்னால் இருந்த பார்ப்பனரல்லாதார் பெருமக்கள் குடும்பங்கள் எல்லாம் எங்கே? மோக்ஷம் மோக்ஷம் தர்மம் தர்மம் புண்ணியம் புண்ணியம் என்று சொல்ல அநேக குடும்பங்களை மூட நம்பிக்கையிலும் முட்டாள் தனத்திலும் இறக்கி அவர்கள் செல்வத்தைக் கொள்ளை கொண்டு பல குடும்பங்களை கெடுத்து விட்டார்கள். சுயராஜ்யம்,விடுதலை,ஹோம்ரூல், உரிமை என்பதாகச் சொல்லி மக்களை ஏமாற்றி இவர்கள் அரசியல் உத்தியோகம் பெற்று ஜட்ஜிகளாகவும் வக்கீல்களாகவும் வந்து விவகாரம் என்கிற வழியில் லஞ்சமாகவும் பீசாகவும் பெருங்குடி மக்களின் செல்வங்களை கொள்ளை அடித்து ஓட்டாண்டி ஆக்கி விட்டார்கள். இப்போது நமது நாட்டில் பெரும் பணக்காரர்கள் யார்? குடியானவர்களுக்கும் ஜமீன்தாரர்களுக்கும் இருந்த பூமிகள் எல்லாம் எங்கே? ஒரு பாகம் மடம் ஆச்சாரியார் அர்ச்சகர் என்கிற பார்ப்பனர்கள் வசம் மானியமாகவும் மற்றொருபாகம் ஜட்ஜி கலெக்டர் வக்கீல் நிர்வாக சபை மெம்பர்கள் அரசாங்கத்திற்கு சிநேகிதர்கள் ராஜ பக்தர்கள் தேசபக்தர்கள் என்கிற பார்ப்பனர்களுக்குமாக மாறி இருக்கிறதே அல்லாமல் வேறு எங்கே இருக்கிறது? இன்றைக்கும் நாளைக்கும் தர்மம் செய்ததாலும் விவகாரம் செய்ததாலும் கெட்டுப் போன குடிகளிடமிருந்து விற்கப் படும் பூமிகளும் ஜமீன்களும் கோர்ட் ஏலத்தில் விடப்படும் பூமிகளும் ஜமீன்களும் யார் ஏலத்தில் எடுக்கிறார்கள். இன்றைதினம் லக்ஷாதிபதியாய் இருக்கும் பார்ப்பனர்களை மூன்றுதலை முறைக்கு முன் அவர்கள் எப்படி இருந்தார்கள் என்று கொடி வழிப் பட்டி எடுத்து பார்த்தால் ரிஷி மூலம் நதி மூலம் பார்ப்பது போல் தான் இருக்கும். ஆனால் அவர்கள் இந்த உயர் நிலைக்கு வரக் காரணமென்ன? என்பதற்கு இந்த காங்கிரசும் மூடபக்தியுமல்லாமல் வேறு என்ன காரணம் சொல்ல முடியும்.

புண்ணியமும் சுயராஜ்யமும்.

(புண்ணியம்.)

உண்மையாக பார்ப்பனருக்குக் கொடுப்பது புண்ணியமானால் பார்ப்பனருக்கு கொடுத்த குடும்பங்கள் எல்லாம் இன்று அரைக் கஞ்சிக்கு ஆவலாய் பறக்க காரணம் என்ன? உண்மையில் காங்கிரசு சுயராஜ்ஜியமளிக்குமானால், நாட்டு மக்களுக்கு வரியும் அறியாமையும் விவகாரமில்லங்கங்களும் அடிமைப்போட்டியும் தரித்திரமும் தொழில் குறைவும் நாளுக்குநாள் விஷம்ஏறுவதுபோல் வளருவதற்கு காரணம் என்ன? உதாரணமாக தஞ்சாவூர் மகாராஜா செய்த தர்மமும் அவர்கள் அந்த ஜில்லா பார்ப்பனர் குடும்பங்களுக்குவிட்ட மானியமும் கட்டின சத்திரங்களும் அதில் சாப்பிடும் பார்ப்பனர்களின் எண்ணிக்கையையும் பார்த்தால் மகாத்மா காந்திக்கும்கூட வயிறுவேகும். அப்படிக் கொடுத்ததஞ்சாவூர்மகாராஜாவின் ராஜாங்கம் இன்று இருக்குமிடத்தைக் காணோம். சேரனும் சோழனும் பாண்டியனும் செய்த தருமமும் கட்டிய கோவிலும் வெட்டிய ஆறுகளும் விட்ட மானியங்களும் இன்றும் பார்க்கலாம் நாளையும் பார்க்கலாம். அவர்கள் அரசாங்க மெங்கே? சந்ததி எங்கே? இன்னும் எங்கள் குடும்பத்திலும் செய்த தர்மமும் சமாராதனையும கொஞ்சமென்று சொல்ல முடியாது. குளிப்பும் பூஜையும் போடும் நாமமும் இன்னம் ஒரு ஐந்தாறு தலைமுறைக்கு எங்கள் பின் சந்ததியார் செய்யாவிட்டாலும் தாங்கும்படி அவ்வளவு செய்திருக்கிறார்கள். என்ன ஆச்சுது? மாணிக்கம்போல் சீமைக்குப் போய் படித்துவிட்டு வந்த 22 வயதுள்ள ஒரே பையனும் மற்றும் ஒரே பெண்ணும் க்ஷயரோகத்தால் முன் பின் மூன்று மாத வித்தியாசத்தில் இறந்துபோனார்கள். பார்ப்பனர்களுக்கு போளி, பேணி, லட்டு, ஜிலேபி, சேமியா பாயாசத்துடன் சமாராதனை செய்து என் தாயார் தகப்பனார் இடுப்பு கட்டிக்கொண்டு ஆயிரக் கணக்கான எச்சிலைகளைத்தாங்களேஎடுத்து எறிவார்கள். வேறு யாராவது எடுத்தால் அந்தப் புண்ணியத்தில் அவர்களுக்கும் பங்கு போய்விடுமாம். அவ்வளவு ஜாக்கிரதைத் தன்மையோடு புண்ணியம் சம்பாதித்தார்கள். என்ன பலன் கண்டார்கள்? ஆயுள் வளர்ந்ததா? சந்ததி வளர்ந்ததா? செல்வம் வளர்ந்ததா? இரண்டு தங்கைகளுக்கும் உள்ள ஒரே பெண்ணுக்கு 10வயதில் செல்வக்கலியாணம் செய்தார்கள். அது சரியாய் 60வது நாளில் தாலி அறுத்தது; அதற்கு மறுபடியும் எங்கள் குலத்திலில்லாத வழக்கப்படி மறு விவாகமும் செய்து வைத்தேன். மறுபடியும் 15வது வயதில் தாலி அறுத்துவிட்டது. என்ன பாக்கியம் கிடைத்தது. இதை எல்லாம் சொன்னால் அவரவர் தலை விதிக்கு யார் என்ன செய்வார்கள் என்று சொல்லி விடுவார்கள். அவரவர் தலை விதிப்படி நடக்கும் காரியத்திற்காக இந்த ஆட்களுக்கு சமாராதனை செய்வதும் சத்திரம் கோவில் கட்டுவதும் மானியம் விடுவதும் கல்விதானம். கன்னிகாதானம் பூமி தானம் செய்வதும் சக்கிரவர்த்தி தலைபோட்ட தங்கப் பவுனால் பாதபூஜை அட்டோத்திரம் சஹஸ்ரநாமோத்திரம் செய்து அவர்களது கால் கழுவிதீர்த்தம் சாப்பிடுவதும் எதற்காக என்றுதான் கேட்கிறேன்.

சுயராஜ்யம்.

அதுபோலவே சுயராஜ்ஜியம் என்னும் பேரால் பொது ஜனங்களை ஏமாத்தி வரு

ஷம் ஒருமுறை தேசியக்கூட்டம் என்று பல பார்ப்பனர்கள் முக்கியஸ்தராயிருந்து கூடி மேடையில் ஏறி தங்களை விளம்பரம் செய்துகொண்டு பொது ஜனங்கள் பேரால் சர்க்காரில் கோர்ட்டுகளையும் உத்தியோகங்களையும் அதிகப்படுத்திக் கொண்டு தாங்களும் தங்கள் மக்கள் மருமக்கள் அண்ணன் தம்பி சுற்றத்தார் ஆகிய இவர்கள் 1000 2000, 5000, 10,000 ரூபாய் சம்பளமுள்ள உத்தியோகங்களைப் பெற்றுக் கொண்டு அதுகளுக்காக சர்க்காருக்கு ஏற்படும் செலவுக்காக மறுபடியும் மக்கள் தலையிலேயே தாங்கமுடியாத அதிக வரிப்போட்டும் இவ்வுத்தியோகங்கள் இவர்களுக்கு கொடுத்ததற்கு பதிலாக நம் நாட்டிலிருந்து கோடிக்கணக்கான செல்வம் அந்நிய நாட்டிற்கு அந்நிய நாட்டு சாமான்கள் நாம் வாங்குவதன் மூலம் கொள்ளை அடிக்கப்பட்டு நாம் சுயமரியாதையற்று பாப்பராய்விடுகிறோம்.

காங்கிரசை வளர விட்டால்

இன்னமும் காங்கிரஸ் வளர வளர பார்ப்பனர் அதிகாரமும் அவர்களுக்கு உத்தியோகமும் அவ்வுத்தியோகத்திற்கு ஏற்றதும் தேசத்துக்கு துரோகமானதுமான படிப்பும் ஜனங்களுக்கு அதிக வரியும் வெள்ளைக்காரருக்கு அதிகமான ஆதிக்கமும் நாட்டில் ஒற்றுமைக்குறைவும் துவேஷங்களும் ஒருவரையொருவர் ஏமாற்றலும் அடிமைக்குப் போட்டி போடலும் ஆகிய கொடுமைகள் அதிகப்படுமே அல்லாமல், எல்லாவிதத்திலும் நாட்டிற்கு ஒரு கடுகளவாவது நன்மை இல்லை.

காங்கிரசில் நன்மை இருந்தால்

நன்மையிருந்தால மகாத்மாவும் லாலா லஜபதிராயும் காங்கிரஸ் நிருவாகத்தைவிட்டு ஓடுவார்களா? சுயராஜ்யக் கட்சியை எதிர்ப்பார்களா? என்பதை நன்றாய் யோசியுங்கள். உதாரணமாக எல்லா இந்திய காங்கிரசு ஏற்பட்ட பிறகுதான் அரசாங்கத்திற்கு நாம் செலுத்திய வரி அதிகமாயிற்று.

காங்கிரசுக்குப் பிறகு

அதாவது காங்கிரஸ் ஏற்படுவதற்கு முன்னால் நமது சர்க்காரார் வருஷம் 1-க்கு நம்மிடமிருந்து வசூல் செய்த வரி 50 கோடி ரூபாயுக்குள்ளாகவே இருந்தது. காங்கிரஸ் ஏற்பட்ட பிறகு ஒன்றுக்கு மூன்றாய் 150 கோடி ரூபாயிக்கு மேலாய் விட்டது. காங்கிரசுக்கு முன்னால் ராணுவச் செலவு வருஷம் 1க்கு 15 கோடியாயிருந்தது. காங்கிரசுக்கு பின்பு 76 கோடி வரையிலும் ஏறி இப்போது ஒத்துழையாமையின் பலனாய் 52 கோடி ஆயிருக்கிறது. குடியும் காங்கிரசுக்கு முன்பு வருஷம் ஒன்றுக்கு சர்க்காருக்கு வரவு இரண்டரைக் கோடி ரூபாயிலிருந்தது. இப்போதுஇருபது கோடிக்கு வந்திருக்கிறது. ரயில் சார்ஜ்ஜு விஷயத்திலும் காங்கிரசுக்கு முன்னால் மைல் ஒன்றுக்கு ஒன்றரை காசு வீதம் இருந்தது. இப்போது நாலரைக் காசுக்கு வந்துவிட்டது இம்மாதிரியாகவே கார்டு, கவர், பத்திரம் ஸ்டாம்பு, கோர்ட் செலவு, அரிசி, பருப்பு, உப்பு, காற்று, தண்ணீர், நெருப்பு வரையில் காங்கிரசுக்கு முன் எப்படி இருந்தது? இப்

## சுயராஜ்யக்கட்சி பார்ப்பனர் கட்சி என்பதற்கு உதாரணம்.

சுயராஜ்யக் கட்சிக்கு விரோதமாக வடநாட்டில் லாலா லஜபதிராயவர்களும் பண்டித மாளவியா அவர்களும் வேலைசெய்து வருவது உண்மை. ஆனால் சுயராஜ்ய கட்சியார் தேர்தல்களில் தங்கள் கட்சிக்கு ஆட்களை நிறுத்தியதில் லாலா லஜபதிராயவர்களுக்கு விரோதமாய் மாத்திரம் நிறுத்தி யிருக்கிறார்களே யொழிய பண்டிதமாளவியாவுக்கு எதிரியாய் யாரையும் நிறுத்தவேயில்லை. இதன் காரணம் என்னவென்றால் லாலாஜி வருணாசிரம தர்மத்தில் நம்பிக்கையும் கவலையும் இல்லாதவர்; பண்டிதரோ வருணாசிரம தர்மத்தை நிலை நிறுத்தி பார்ப்பன ஆதிக்கத்தை நிரந்தரப்படுத்தவே ஒவ்வொரு நிமிடமும் உயிர் வாழ்பவர். ஆதலால் பண்டிதருக்கு எதிரியில்லாமல் செய்துவிட்டு லாலாஜிக்கு மாத்திரம் எதிரியை நியமித்திருக்கிறார்கள். சுயராஜ்யக்கட்சி பார்ப்பனர்கட்சி என்பதற்கு புத்திசாலிகளுக்கு வேறு என்ன உதாரணம் வேண்டும்.

---

போது எப்படி இருக்கிறது? என்பதும் கடைசியாய் பார்ப்பனரல்லாதார் நிலை காங்கிரசுக்கு முன் எப்படி இருந்தது? பின் எப்படி இருக்கிறது? என்று பார்த்தாலும் நன்றாய் விளங்கும். ஆதலால் இனி அரை நிமிடமாவது நமது நாட்டில் காங்கிரசு இருப்பதைப்போல் நமக்கும் நமது நாட்டிற்கும் ஆபத்தான சாதனம் வேறொன்றுமில்லை.

இது சமயம் நமக்குவேண்டியது

அன்றியும் இதுசமயம் நமக்கு வேண்டியது சுயமரியாதையே ஒழிய பார்ப்பனர் மூலம் வரும் மோக்ஷமும் சுயராஜ்யமும் அல்லவே அல்ல. ஆதலால் வரப்போகும் தேர்தலில் உங்களுக்கு ஓட்டுச்செய்ய இஷ்டப்பட்டால் சுயராஜ்யம் என்று சொல்லிக்கொண்டு உங்களிடம் வந்து யார் ஓட்டுக்கேட்டாலும் அவர்களை வடிகட்டின அயோக்கியர்கள், தேசத்துரோகிகள், சுயகாரியப் புலிகள் என்று நினைத்துக்கொள்ளுங்கள். சுயமரியாதைக்கு என்று யார்வந்து ஓட்டுக் கேட்டாலும் தாராளமாய்க் கொடுங்கள். அதனால் ஒரு சமயம் நன்மை இல்லாவிட்டாலும் தீமை இல்லை; சுயராஜ்யம் என்று நினைத்து ஓட்டுச் செய்வீர்களானால் கொள்ளிக்கட்டை எடுத்து தலையைச் சொரிந்துகொண்டதையே ஒக்கும் உண்மையான சுயராஜ்யம் மகாத்மா திட்டத்தில்தான் இருக்கிறது. உண்மையான சுயமரியாதை ஜஸ்டிஸ் கக்ஷி திட்டத்தில்தான் இருக்கிறது. நமது பார்ப்பனரிடமோ அவர்கள் கைவசமுள்ள காங்கிரசிடமோ, சுயராஜ்யக் கட்சியிடமோ, பார்ப்பன ஆதிக்கத் திட்டம்தான் இருக்கிறது. ஆதலால் ஏமாந்துவிடாதீர்கள்.

தீபாவளியின்போது ஏழைகளையும்தொழிலாளர்களையும் தேசத்தையும் மறந்து இவர்களுக்கு துரோகிகளாகாமல் கதரை உடுத்துங்கள்.

---

## காங்கிரஸ் தலைவியாகிய ஸ்ரீமதி சரோஜினி தேவியின் வாக்கு.

### "ஜஸ்டிஸ் கட்சியை நான் வரவேற்கிறேன்."

நான் தென்னிந்திய பார்ப்பனர்களின் யோக்கியதையை நன்றாயறிவேன். அப்பொல்லாப்பார்ப்பனர்களின் கொடுமையினால்தான் பார்ப்பனரல்லாதாரியக்கம் உண்டாக வேண்டியதாயிற்று. அவர்கள் தங்களை உயர்வாய்க் கருதிக் கொள்ளும் அகம்பாவத்தை நான் பலமாய் வெறுக்கிறேன் பார்ப்பனரல்லாதாரியக்கம் தான் எல்லா வகுப்பாரும் சமமாய் முன்னேற்றமடைவதற்கு உதவியாயிருக்கிறது. எல்லா வகுப்பாருக்கும் சமமான உரிமை பங்கு கிடைக்கு மட்டும் இந்த பார்ப்பனரல்லாதாரியக்கம் (ஜஸ்டிஸ்கட்சி) உயிருடன் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். ஆதலால் இந்த பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை (ஜஸ்டிஸ்கட்சியை) நான் மனப்பூர்வமாய் வரவேற்கிறேன். பார்ப்பனரல்லாதார் தங்களுடைய நிலைமையை அறிந்து நியாயமான உரிமை பெறுவதற்கு இது சமயம் விழித்துக் கொண்டதைப் பற்றி நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன் என பெல்காமில் 1924-ல் கூடிய அகில இந்திய பிராமணரல்லாதார் காங்கிரஸ் மஹா நாட்டில் தேசீய காங்கிரஸ் தலைவியான ஸ்ரீமதி சரோஜினி தேவியே பேசியிருக்கிறார் என்றால் மற்றபடி அதன் பெருமையைச் சொல்ல வேண்டுமா? ஆதலால் இத்தேர்தலில் சமத்துவத்திலும் சுயமரியாதையிலும் கவலையுள்ள யோக்கியமான பார்ப்பனரல்லாதார் யாருக்கு ஓட்டுச் செய்ய வேண்டுமென்பதைப் பற்றி நாம் சொல்லவேண்டியதில்லையென்றே நினைக்கிறோம்.

## திருச்சி.


சட்ட சபை மெம்பராகவும் திருச்சி ஜில்லா போர்டுக்கும் வைஸ்பிரசிடெண்டாகவும் போட்டியன்னியில் தெரிந்தெடுக்கப்பட்ட ஸ்ரீமான் டி.எம். நாராயணசாமிபிள்ளை பார்-அட்-லா அவர்களுக்கு திருச்சி தமிழ்ச் சங்கத்தாரால் ஈரோடு ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களது அக்கிராசனத்தில் ஒரு சிற்றுண்டி விருந்து நடத்தி வாழ்த்துரைப் பத்திரமும் வாசித்து கொடுக்கப்பட்டது. பல தமிழ் வித்துவான்களும் பிரபலஸ்தவான்களும் வந்திருந்தார்கள். அதுசமயம் ஸ்ரீமான் அ.மு. சரவணமுதலியார் அவர்களால் "சேக்கிழாரும் தமிழும்" என்பதுபற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது ஸ்ரீமான் பிள்ளை அவர்கள் தனக்குச் செய்த மரியாதைக்கு ஆக நன்றி செலுத்தி விட்டு தமிழுக்கும் நாட்டிற்கும் தன்னால் கூடியவரை உழைப்பதாக வாக்களித்தார்: அக்கிராசனர் முகவுரையுடன் தமிழ் பண்டிதர் ஸ்ரீமான் வேங்கடசாமி நாட்டார் அவர்கள் வந்தனமளிக்கக் கூட்டம் இனிது நிறைவேறியது. அக்கிராசனர் முடிவுரை பின்னால்வரும்

---

## சட்ட சபைத் தேர்தல்,

### மதுரை ஜில்லா வாசிகளுக்கு ஓர் வேண்டுகோள்.

நமது ஜில்லாவின் மூன்று ஸ்தானங்களுக்கு ஸ்ரீமான்கள் பி.டி. ராஜன், சேத்தூர் ஜமீன்தார், பி. எம். எஸ். செட்டியார், கே.பி. கே. மேனன் முதலிய பார்ப்பனரல்லாத கனவான்களுள் மூவரையே தேர்ந்தெடுக்க வேண்டும். பார்ப்பனருக்கு ஒரு ஓட்டாவது போடக்கூடாது என உசிலம்பட்டி ஸ்ரீமான் பொன்னுசாமிநாயுடு அறிவிக்கிறார்.



அனைத்துயர் ஒன்றன்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே


# குடி. அரசு.

அக்ஷய-ஹு ஐப்பசி-மீ 22-உ


## சட்டசபைத் தேர்தல்

அடுத்துவரப்போகும் சட்டசபைத்தேர்தல் பிரசாரங்களைப்பற்றி இதுவே கடைசித் தடவையாக இருக்கும். ஏனெனில் அடுத்த திங்கட்கிழமை தேர்தல் நடக்கப்போகிறது. தேர்தல் பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டு பல மாதங்களானபடியால் இவ்வளவு நாள் எழுதாத விஷயங்கள் ஒன்றும் இன்று புதிதாக எழுதப்போவதில்லை. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் தேர்தல்கள் என்பது ஒரு பெரிய சூதாட்டத்திற்கு சமானமானதாகி விட்டது. தேர்தலில் இறங்குகிறவர்களோ எவ்வெவ்வழிகளில் பாமர மக்களை ஏமாற்றி வெற்றிபெறலாம் என்பதில் கருத்தாயிருக்கிறார்களே ஒழிய தேர்தலில் வெற்றிபெறுவதன்மூலம் பொதுஜனங்களுக்கு எப்படி உழைக்கலாம் என்பதைப்பற்றி கவலையே இல்லை. தேர்தலில் வெற்றிபெறவேண்டியவர்களுக்கு பொய்யும், ஏமாற்றலும், தந்திரங்களும், சூழ்ச்சிகளும், பணச்செலவும் தான் யோக்கியதாம்சங்களாய் போய்விட்டதே தவிர பரோபகாரம், சத்தியம், நீதி இவைகள் கொஞ்சமும் யோக்கியதை அற்றதாய்போய்விட்டன. ஓட்டர்களும் ஆடம்பரத்தையும், விளம்பரத்தையும் தங்களது சுயநலத்தையுமே விரும்புகிறார்களே ஒழிய யோக்கியத்தன்மையையோ, நாட்டின்க்ஷேமத்தையோ, குலாபிமானத்தையோ கொஞ்சமும் கவனிப்பதில்லை. இம்மாதிரி தேர்தல்களாலும், அபேட்சகர்களாலும், ஓட்டர்களாலும், தேசத்திற்கோ, மக்களுக்கோ, குலத்திற்கோ என்ன நன்மை ஏற்படப்போகின்றது? என்பது நமக்கே விளங்கவில்லை. நம் நாட்டு தேர்தலில் இப்போது இருக்கும் கட்சிகள் எல்லாம் பிராமணர், பிராமணரல்லாதார் என்கிற இரண்டே கட்சிதான். இதில் பார்ப்பனர்களுக்கு உள்ள நோக்கமும், யோக்கியதையும் என்னஎன்று பார்ப்போமானால், பார்ப்பனர்கள், தேசம், சுயராஜ்யம், தியாகம், மகாத்மா, சர்க்காரை எதிர்த்தல் ஆகிய வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டும், பார்ப்பனரல்லாதாரை தேசத்துரோகிகள், சர்க்கார் அடிமைகள், வகுப்புவாதிகள் என்று சொல்லிக்கொண்டும் பொது மக்களை ஏமாற்றி தாங்கள் ஆதிக்கம் பெற வேண்டும் என்கிற ஒரே நோக்கத்தைத்தவிற வேறொன்றுமில்லை. இவை எல்லோருக்கும் வெளிப்படையாய் தெரிந்த விஷயமே அல்லாமல் மறைவானவையல்ல.

இதற்காக இவர்கள் கையாடும் வழிகளோ பொய் பிரசாரம் செய்வதும், எதிரி பேரில் பழி சுமத்துவதும், கூலிகொடுத்து, ஆள்களைவைத்து, எதிரிகளை வையச் செய்வதும், காலித்தனங்கள் செய்வதும், பணம் கொடுத்து ஓட்டு வாங்குவதும் ஆகியவைகளே முக்கியமானவை.

பார்ப்பனரல்லாதாரின் நோக்கமோ ஆயிரக்கணக்கான வருஷங்களாய் பார்ப்பனர்களால் தாங்கள் ஏமாற்றப்பட்டு வந்ததின்காரணமாய் சுயமரியாதையற்று சமத்துவமற்று மனிதத் தன்மையற்று அடிமைத்தனத்தில் ஆழ்ந்து கிடப்பதிலிருந்து வெளிபெறவேண்டும் என்கிற ஒரே நோக்கத்தோடு எந்தெந்த வழிகளில் பார்ப்பனர் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்தி வருகிறார்களோ அவ்வழிகளை அடைத்தும் அதற்கு எதெதை ஆயுதமாக உபயோகித்து வருகிறார்களோ அந்த ஆயுதங்களையும் கைப்பற்ற வேண்டுமென்பதே அவர்களது முயற்சியாகும். இதுதான் நாளைய தேர்தலின் இரு கட்சியின் தத்துவமும் முடிவான லக்ஷியங்களுமாகும்.

இந்த லக்ஷியத்தில் நமது பார்ப்பனர்கள் நம்மை இதுவரை எய்த்து வந்ததுபோல் இனி எய்க்க முடியாது என்று தைரியமாய்ச் சொல்வோம். பாமர மக்கள் ஏறக்குறைய பார்ப்பனர்களின் நோக்கங்களையும், தந்திரங்களையும் அறிந்து கொண்டார்கள் என்றே சொல்ல வேண்டும். எதனால் நாம் இப்படிச் சொல்லுகிறோம் என்றால் பார்ப்பனர்களுக்கும் அவர்களது பிரசாரங்களுக்கும் நாட்டில் உள்ள மதிப்பைப் பார்த்தாலே தெரியவரும் தமிழ் நாட்டில் எந்த ஊரிலானாலும் கிராமத்திலானாலும் ஒரு பார்ப்பனர் தானாகப்போய் ஒரு கூட்டம் கூட்டி பேசுவதற்கு யோக்கியதை இல்லாமல் போய்விட்டது. எங்கே போவதானாலும் கூட ஒரு பார்ப்பனரல்லாதார் இருந்தால் தான் இவர்கள் பேச முடிகிறது. உதாரணமாக சென்னையில் பேசக்கூடிய பார்ப்பனர்கள் எவ்வளவோ பெயர்கள் இருந்தும், பார்ப்பன ரல்லாத ஆள்களுக்கு கூலி கொடுத்துதான் மேடைகளில் பிரசாரம்செய்யச்செய்ய முடிகிறதே அல்லாமல் பார்ப்பனர்கள் மேடையில் ஏறிப் பேச முடிவதில்லை. வெளியிடங்களிலும் இவர்கள் போய்பேச ஆரம்பித்தால் கலகம் நடக்காமல் இருப்பதும் இல்லை. இதுகள் எல்லாம் எதைக் காட்டுகின்றன என்றால் தேசத்தில் இவர்கள் யோக்கியதையை பாமர ஜனங்கள் அறிந்து கொண்டதை காட்டுகின்றது. இதை அனுசரித்துத்தான் வரப்போகும் தேர்தல்களின் முடிவும் ஏற்படப்போகிறது. நமது எதிரிகள் தங்களது முழு பலத்தையும் கொண்டு வேலை செய்தது முக்கியமாய் இரண்டு ஸ்தானங்களில் தான்; அதாவது பனகால் ராஜாவின் ஸ்தானத்தில் ஸ்ரீமான் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் அவர்களை நிறுத்தியும் ஸ்ரீமான் ஏ. ராமசாமி முதலியார் அவர்கள் ஸ்தானத்தில் ஸ்ரீமான் ஒரு முத்துரங்க முதலியார் என்பவரையும் நிறுத்தியும் எவ்வளவோ பணச்செலவும்சூழ்ச்சியும்செய்து போட்டிபோட்டு வேலை செய்து வந்தார்கள் ஆன்போதிலும் ஸ்ரீமான்கள் பனகால் ராஜாவுக்கும் ஏ. ராமசாமி முதலியாருக்கும் வெற்றீ நிச்சயம் என்பது உறுதியாகிவிட்டது. மற்றும் பல இடங்களிலும் இதுபோலவே வெற்றி கிடைக்கப்போகிறது என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால் ஒரு சில இடங்களில் மாத்திரம் பார்ப்பனர் பொய்ப் பிரசாரங்களுக்கு மதிப்பு இருக்கிறதாக தோன்றுகிறது. அதுவும் பார்ப்பனர்கள் நேரிட்டுச் செய்வதாயில்லா பார்ப்பனரல்லாதாரைக்கொண்டு செய்விக்கும் இடங்களில்தான் பாமர ஜனங்கள் ஏமாற்றமடைகிறார்கள். இதுவரை எந்தப் பார்ப்பனராவது பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு அநுகூலமாய் பிரசாரம் செய்ய வந்திருக்கிறாரா? என்றால் ஒருவர்கூட இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். பார்ப்பனருக்கு வேறு எவ்வளவு கெட்டகுணம் இருந்தாலும் தங்கள் வகுப்பு விஷயத்தில் எல்லாரும் ஒன்றுசேருவது அவர்களிடமிருந்துநாம்கற்றுக்கொள்ளவேண்டிய விஷயம். பார்ப்பனரல்லாதாரிலோ இந்தகுணம்குறைவுஎன்றுதான்சொல்லவேண்டும். கேவலம் வயிற்றுப் பிழைப்புக்காக தங்கள் குலத்தையும், சுயமரியாதையையும் விற்கும்படியான இழிகுணம் படைத்த ஜனங்கள் இருப்பதானது, பார்ப்பனரல்லாத சமூகத்திற்கே மானக்கேடான காரியம். இம்மாதிரி கூலிக்கு மாரடிக்கும் ஆள்கள் நமது வகுப்பில் இருக்கிற காரணத்தினாலேயேதான் இவ்வருட தேர்தலில் நமது பார்ப்பனர் இவ்வளவு பெரிய ஆர்பாட்டம் செய்ய முன் வந்தார்கள். இல்லாதவரை இதற்குள்ளாக மூட்டைகளைக் கட்டிக்கொண்டு பஞ்சாங்கத்திற்கே புறப்பட்டிருப்பார்கள். என்ன செய்யலாம் “இழி மக்களைப்பெற்ற தாய் அதன் பலனை அடைந்துதான் தீர வேண்டும். ஆனபோதிலும்இம்மாதிரிகூலித் தொண்டர்கள் வார்த்தையில் மயங்கி தங்களது ஓட்டுரிமையை பார்ப்பனர்களுக்கோ அல்லது அவர்களது கட்சியாகிய சுயராஜ்யக் கட்சியார்களுக்கோ கொடுத்து தங்களது முன்னேற்றத்தை தடைசெய்து கொள்ளமாட்டார்கள் என்றே நினைக்கிறோம்.

---

### என் தண்டபாணி கம்பேனி.

தண்டபாணி கம்பெனியின் வியாபாரஸ்தலத்தைப்பற்றி ஒரு விளம்பரம் அடுத்த பத்திரிகையில் பிரசுரித்திருக்கிறோம். பொது ஜனங்கள் வெளியிலிருந்து சாமான் தருவிப்பதில் பலபேருக்கு ஆர்டர் அனுப்பி ஏமாந்துவிடுகிறார்கள். இக்கஷ்டம் நிவர்த்தியாவதற்காகவே தேசபக்தர் ஸ்ரீமான் என். தண்டபாணி பிள்ளை அவர்கள் சென்னையில் ஒரு வியாபார கம்பெனி ஏற்படுத்தி நடத்தி வருகிறார். இக்கம்பெனிக்கு யாரும் நம்பிக்கையாய் எவ்வளவு பணத்திற்கு வேண்டுமானாலும் ஆர்டர் அனுப்பலாம் அத்துடன் எவ்வளவு தொகையும் முன்பணமாக அனுப்பலாம் என்று தைரியமாய் சிபார்சு செய்கிறோம்.

# பணகால் ராஜாவின் வீரமுழக்கம்.

## வெற்றி நமதே!
## விறல்
## வெற்றி நமதே!

## தென்னாட்டு திராவிட மக்களே! விழிமின்! எழுமின்! இதுவே சமயம்

சகோதரர்களே!

நமது மாகாணத்துப் பொதுத் தேர்தலில் நாம் வெற்றிபெற முடியாதபடி நம் எதிரிகளான பார்ப்பனர்கள் நம்மீது எவ்வளவோ பழியைச் சுமத்தியும் தாறுமாறுக வாயில் வந்தபடியெல்லாம் நம்மைவைதும், அப்பார்ப்பனர்கள் திகில் அடையும்படியான அளவுக்கும், பொதுமக்கள் ஆச்சரியப்படும்படியான அளவுக்கும் எங்கு பார்த்தாலும் நமக்கே பொது மக்கள் ஆதரவும், அநுதாபமும் இருந்துவருகிறது. ஆதலால் நாமேதான் எந்தவிதத்திலும் கண்டிப்பாய் வெற்றியடையப்போகிறோம். அவ்வெற்றியானது எல்லா வழிகளிலும் முன்னிலும் அதிகமான அளவு எண்ணிக்கையுள்ள வெற்றியாகவே இருக்குமென்பதாக நான் உறுதிகூறமுடியும். பார்ப்பனரல்லாதஎன் சகோதரர்களே! உங்களுக்கு ஒரு வார்த்தைசொல்லுகிறேன். நமது எதிரிகளான பார்ப்பனர் நம்மைத் தோற்கடிக்க எப்படி கட்டுப்பாடாகவும் ஒற்றுமையாகவும் இருந்து வைதீகத்திலும், லௌகிகத்திலும் அவர்கள் பெற்றிருக்கும் செல்வாக்கின் பலம் முழுவதையும் செலுத்திப் பாடுபடுகிறார்களோ அதுபோலவே நீங்களும் நமது கட்சியின் வெற்றிக்குப் பாடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இத்தேர்தலின் முடிவைப்பொறுத்துதான் நமது கதிமோக்ஷமிருக்கிறது. ஒரு கூட்டத்தார் மாத்திரமே தொன்று தொட்டு சர்வ சுதந்தரமாயனுபவித்துவரும் தனி உரிமைகளை சகலரும் சமமாய் அநுபவிக்கவேண்டுமென்கிற சமசுதந்திரத்திற்காகவேண்டி சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு நியாய யுத்தம் செய்கிறோமாகையால் மேற்கண்ட நமது எதிரிகள் இவ்வளவு கட்டுப்பாடான முயற்சியுடன் நம்மை எதிர்க்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். யாராவது ஒரு பார்ப்பனர் நமது தர்ம யுத்தத்திற்கு அநுகூலமாய் நமக்கு உதவி செய்வதை இந்தத் தேர்தலில் பார்க்கிறீர்களா? அப்படியிருக்க, நம்மவர்களைக்கொண்டு நம் எதிரிகள் எவ்வளவோ காரியத்தைச் சாதித்துக்கொள்ளுகிறார்கள். ஒவ்வொரு வகுப்பாரும் தங்களை விடுதலை செய்துகொள்ள சக்திபெறும் வரை மக்களுக்கு பிறவியினுல் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தடங்கல் நீங்கி எல்லோரும் சமம் என்கிற உணர்ச்சி ஏற்படுகிறவரையில் சுயராஜ்யமென்பது அர்த்தமற்ற பசப்பு வார்த்தையாகவேயிருக்கும். நம் எதிரிகள் சர்க்காரை எதிர்ப்பது, முட்டுக்கட்டைபோடுவது என்று பாமர ஜனங்களை ஏமாற்றிய தன் தத்துவம் இப்போது வெட்டவெளியாய்விட்டது. அதோடு அவர்களுடைய அந்தரங்க நோக்கம் என்னவென்பதும் வெளியாகிவிட்டது. அதாவது வரப்போகும் சீர்திருத்த விசாரணையில், தங்களுடைய ஆதிக்கத்தை பலப்படுத்திக்கொள்வதற்கு சட்டசபையை தங்களுக்கு அநுகூலமாக உபயோகப்படுத்திக்கொள்வதற்காகவே சட்டசபையைத் தாங்கள் கைப்பற்ற இவ்வளவு பிரயத்தனப்படுகிறார்கள். ஆதலால் ஏமாறுதீர்கள்! ஏமாறுதீர்கள்!! வெற்றி நமதே! விறல் வெற்றி நமதே!!

---

# ‘முஸ்லீம்கள் சுயராஜ்யக் கட்சிக்கு ஓட்டுக் கொடுக்கலாகாது’

## “மீறி கொடுப்பவர்கள் மதத்துக்கும் சமூகத்துக்கும் துரோகிகளாவார்கள்”

## மௌலானு ஹசரத் மோகினியின் அபிப்பிராயம்.

“ஸைபுல் இஸ்லாம்” 1926ஞு அக்டோபர்-ீ 27உ “யாருக்கு ஓட்டுக் கொடுப்பது” என்ற தலையங்கத்தில் எழுதுவதாவது :—

சுயராஜ்யக் கட்சியார் சுயநல நோக்கங்கொண்டு பாமர ஜனங்களைப் பசப்பு வார்த்தைகளாலும் பல்வேறு சூழ்ச்சிகளாலும் ஏமாற்றி, ஓட்டுகளைப் பெறுவதில் கண்ணுங்கருத்துமாக நின்று, பொய்யையும் புரட்டையும் சொல்லக் கொஞ்சமும் தயங்காமல், வெகு மும்முரமாக வேலை செய்து வருகின்றனர். சுயராஜ்யக் கட்சிப் பத்திரிகைகள் நெறிதவறி தங்கள் அபிப்பிராயங்களுக்கு மாறுபட்ட அபிப்பிராயமுடைய கட்சியை அநீதமாகத் தாக்குவதையும், குறை கூறுவதையும் அவைகளின் தொழிலாகக்கொண்டுவிட்டன. சுயராஜ்யக் கட்சியார் செய்து வரும் அற்பத் தனமான காரியங்களால் பொது ஜனங்களுக்கு காங்கிரஸ் மகா சபையின் மீதிருந்த நம்பிக்கையும் மதிப்பும் எடுபட்டுப் போய்விட்டன.

சட்டசபை மோகம் கொண்ட ஹிந்து, முஸ்லிம் சிலர்கள் மட்டும் அவர்கள் கொண்டுள்ள மோகத்தால் அவர்களின் கண்கள் ஒளிகுன்றி அக்கட்சியினர் தங்கள் சமூகத்திற்குச் செய்யும் கெடுதிகளை உணராமல், சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்துகொண்டு சட்டசபைகளுக்கு அபேக்ஷகர்களாக நிற்கின்றனர். அவ்வாறு நிற்பவர்களில் பலர் இதற்கு முன் காங்கிரஸ் வேலையில் ஒரு சிறிதளவும் ஈடுபட்டுழையாதவர்களுமுளர். எனவே அவர்கள் இப்போது சுயராஜ்ஜியக் கட்சியில் சேர்ந்ததற்கு சட்ட சபைக்குச் செல்லவேண்டுமென்ற மோகத்தைத் தவிர வேறு காரணம் இருப்பதாகச் சொல்ல ஆதாரமில்லை! தற்கால சுயராஜ்யக் கட்சியார் பொதுவாக பிராமணரல்லாத எல்லா சமூகங்களுக்கும் குறிப்பாக முஸ்லிம் சமூகத்திற்கும் இழைத்துவரும் தீங்குகளை நாம் பன்முறை விவரமாகஎடுத்து விளக்கிக் கூறியுள்ளோம்.

வடமேற்கு எல்லைப்புற விஷயத்தில் அவர்கள் செய்த அநீதி, பஞ்சாப் லேவாதேவிக்காரர் மசோதா சம்பந்தமாக அவர்கள் நடந்துகொண்டமாதிரி, மேன்மைதங்கிய நிஜாம் அவர்கள் சம்பந்தமாக அவர்கள் செய்த விஷமப்பிரசாரம், உருது பாஷைக்குப் பதிலாக ஹிந்தி பாஷையை நிலைக்கச் செய்ய அவர்கள் செய்யும் முயற்சி, கல்கத்தா டிப்டி மேயர் ஜனுப் ஷஹூரவர்த்தி விஷயத்தில் அவர்கள் மனப்பான்மை இன்னும் இவை போன்ற பல அநீதிகள் சுயராஜ்ஜியக் கட்சியார் செய்துள்ளதை இச்சமயம் நேயர்களுக்கு ஞாபகப்படுத்துகிறோம்

சட்ட சபைகளின் தேர்தல் தேதி நெருங்க நெருங்க சுயராஜ்ஜியக் கட்சியின் விஷமப்பிரசாரமும் அதிகப்பட்டு வருகிற தென்று தெரிகிறது. வாக்காளர்களுக்கு இது ஒரு சோதனை காலமென்றே கூறலாம். தங்கள் வாக்கை சமூகத்திற்கும் தேசத்திற்கும் மதத்திற்கும் ஆதரவளிக்கும் வழியில் உபயோகப்படுத்த விரும்பும் வாக்காளர்கள் சுயராஜ்ஜியக்கக்ஷிக்கு எதிராய் நிற்கும் அபேக்ஷகர்களுக்கே தங்கள் ஓட்டை கொடுக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்திக் கூறுகிறோம். ஏனெனில் சுயராஜ்யக் கட்சி, பிராமணமயமானதாகவும் அச்சமூகத்தின் நன்மையையே பிரதானமாகக் கொண்டதாகவும் இருப்பதால் அக்கட்சியில் சம்பந்தப்பட்ட பிராமணரல்லாத சட்ட சபை மெம்பர்கள் எவ்வளவு படிப்பாளிகளாயிருந்தாலும் தன் சமூகத்திற்கு பிராமண மெம்பர்களின் அநுமதியின்றி ஒருவித சாதகமும் செய்துக்கொள்ள முடியாதென்பது திண்ணம். பிராமணர்கள் தங்கள் இனத்தார் தவிர இதரர்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படுவதை சகிக்க மாட்டார்களென்பதும், அவ்விதம் நன்மை ஏற்படுவதை தடுப்பார்களென்பதும் யாவரும் அறிந்த விஷயம். சுயேச்சையாக சமூகத்தின் சார்பாக நிற்கும் அபேட்சகர்களுக்கு நாவன்மையாய் பேசுந்திறமை இல்லாவிடினும், சமூக நன்மையைக் கருதிப் பேசும் திறமையுள்ள சுயேச்சை மெம்பரின் அபிப்பிராயத்திற்கு உதவியாக தனது ஓட்டைக் கொடுத்து தன் சமூகத்திற்கு சாதகம் செய்ய முடியும் என்பது வெளிப்படை. சுயராஜ்யக் கட்சிக்கு ஓட்டுக் கொடுப்பதால் சமூகத்திற்கு நன்மைக்குப் பதிலாக தீமையே ஏற்படும். சுயேச்சையாக நிற்பவர்களுக்கு ஓட்டுக் கொடுப்பதால் நன்மை ஏற்படாவிட்டாலும் தீமை ஏற்படாதென்பது நிச்சயம்.

குறிப்பாக முஸ்லிம் சுயராஜ்ஜியக் கட்சி அபேட்சகர்களுக்கு ஓட்டுக் கொடுக்கலாகாதென்றும், அவ்வாறு கொடுப்பவர்கள் இஸ்லாம் மதத்திற்கும் சமூகத்திற்கும் துரோகிகளாவார்கள் என்றும் கூறிய மௌலானு ஹஸரத் மோகினி அவர்களின் அபிப்பிராயத்தை நேயர்கட்கு இச்சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்துகிறோம்.

## பார்ப்பனர்களால் வந்த வினை.

### மலையாளக்குடிவார மசோதாவை ஒழித்துவிட்டார்கள்.

### இனி தேவஸ்தான மசோதாவை ஒழிப்பது தான் பாக்கி.

### இனியும் பார்ப்பனர்களுக்காவது அவர்களால் நிறுத்தப்பட்ட ஆட்களுக்காவது சட்ட சபைக்கு ஓட்டுக் கொடுப்பீர்களானால் நமது கதி அதோ கதி தான்.

மலையாளக் குடிவார மசோதா சட்ட சபையில் நிறைவேற்றக் கொண்டு வந்த காலத்தில் பார்ப்பன சட்ட மெம்பரான சர். சி. பி. ராமசாமி ஐயரவர்கள் ஆணவத்தோடு மிரட்டி, இச்சட்டத்தை கவர்னரைக் கொண்டு நிராகரிக்கச் செய்து அமுலுக்கு வாராமல் செய்துவிடுவேன் என்று வீரம் கூறியது வாசகர்கள் அறிந்திருக்கலாம். இப்போது அவர் சொன்னது போலவே சட்ட சபையில் பெரும்பான்மையோரால் நிறைவேறின இச்சட்டத்தை ஏதோ சில நோண்டிச் சாக்குகளுடன் கவர்னர் பிரபு நிராகரித்து விட்டார். நமது நாட்டில், வெள்ளைக்கார அதிகாரவர்க்க ஆட்சி, பார்ப்பன ஆதிக்கவர்க்க ஆட்சி என இரண்டு கொடுமையான ஆட்சிகளின் கீழ் நாம் பாஷாணத்தில் புழு இருப்பதுபோல் காலந் தள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். நம்முடைய மேன்மைகளும், முன்னேற்றங்களும் வெள்ளைக்காரருக்கோ பார்ப்பனருக்கோ தங்களது ஆதிக்கத்திற்குக்கடுகளவு இடைஞ்சல் செய்வதாயிருந்தாலும் கொஞ்சமும் தயவு தாட்சணியம் இல்லாமல் அடியோடு நசுக்கிவிடுகிறார்கள். அரசாங்கத்தார் எந்த கட்சி ஜெயிக்குதோ அந்தக் கட்சியைத்தான் ஆதரிப்பார்களேயல்லாமல் நியாயம் சத்தியம் என்பவைகளை கொஞ்சமும் கவனிக்க மாட்டார்கள். ஆதலால் அடுத்த சட்ட சபையில் பார்ப்பனரல்லாதார் கட்சி வெற்றி பெறாமல் போய் பார்ப்பனர் வெற்றி பெற ஏற்படுமானால் பாக்கியிருக்கும் தேவஸ்தான மசோதாவையும் கண்டிப்பாய் ஒழித்துவிடுவார்கள். இதை உத்தேசித்தாவது இனியும் பார்ப்பனர்களுக்காவது அவர்களால் நிறுத்தப்பட்ட ஆட்களுக்காவது சட்ட சபைக்கு ஓட்டுக் கொடுப்பீர்களானால் நமதுகதி அதோகதி தான்.

---

### பொன்னம்பல ஞானதேசிகர் குருபூஜா மஹோத்ஸவ பத்திரிகை.

ஸ்ரீ சிதம்பர க்ஷேத்திரத்தில், ஸ்ரீ கண்ணனருள் கிடைக்கும், கைவல்யமெனு நூற்கும் கவின் பெறு முறைகளியற்றியும், சிதம்பரத்தில் அரிய மடமொன்றியற்றி தனைபணிய அடியவர் பவப்பிணி மருத்துவராயிருந்தும் விதேக முத்தியெய்திய ஸ்ரீ பொன்னம்பல ஞானதேசிகப் பெருந்தகையின் 22 வது வருடக் குரு பூஜை நாளது மீ 19-உ குருவாரமும், சித்திரா நக்ஷத்திரமுங் கூடிய சுபதினத்தில், நடைபெற்றதாக சிதம்பரம் ஸ்ரீ பொன்னம்பல ஸ்வாமிகள் மடாலயம், ஸ்ரீலஸ்ரீ பரஞ்சோதி ஸ்வாமி அறிவிக்கிறார்.

---

## சுயராஜ்யக் கட்சிக்கு தேசத்திலுள்ள செல்வாக்கு

### "சென்றவிடமெல்லாம் சிறுமை"

---

சுயராஜ்யக் கட்சியார் இதுவரை தங்களுக்கு தேசத்தில் பிரமாதமான செல்வாக்கிருப்பதாகவும், செல்லுமிடங்களிலெல்லாம் தங்கள் கட்சிக்குப் பெரிய ஆதரவிருக்கிறதென்றும் பறையடித்துக்கொண்டு வந்தது வாசகர்கள் அறிந்திருக்கலாம். ஆனால் இதனுடைய உண்மை, கடந்த ஒரு மாத காலமாக ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, எ. ரங்கசாமி ஐயங்கார், பண்டித நேரு முதலிய பார்ப்பனர்கள் பிரசாரத்திற்கென்று எங்கெங்கு செல்லுகிறார்களோ அங்கெல்லாம் இவர்களது ரகஸ்யம் வெளியாகி பொது ஜனங்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லமுடியாமல் கூட்டத்தைக் கலைத்துவிட்டு ஓடின வண்ணமாகவே இருக்கிறார்கள். உதாரணமாக கும்பகோணத்தில் ஸ்ரீமான் எ. ரங்கசாமி ஐயங்காரவர்கள் பொதுஸ்தலங்களில் கூட்டம்போட முடியாமல் ஒரு கட்டடத்திற்குள் கூட்டம் போட்டும் அங்கும் பொது ஜனங்கள் ஒரு அக்கிராசனரைப் பிரேரேபிக்க பார்ப்பனர்கள் வேறு ஒருவரைப் பிரேரேபிக்க கடைசியாய் அய்யங்கார் போலீசார் தயவு தேடவேண்டியதாயிற்று. மதுரை, திருநெல்வேலி முதலிய இடங்களில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் சென்ற காலத்திலும் கூட்டங்களில் பொது ஜனங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் கூட்டத்தைக் கலைத்துவிட்டு ஓடும்படியாகிவிட்டது. பண்டித நேரு அவர்களும் செல்லுகிற இடங்களில் கூட்டங்களில் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் திணறுகிறார். இவைகள் "சுதேசமித்திரன்" பத்திரிகையில் பார்த்தால் தென்படாது. திராவிடன் வடநாட்டு பத்திரிகைகள் ஆகியவைகளில் காணலாம். இவர்கள் பேச்சைக் கேட்க இஷ்டமில்லாத ஜனங்களும் மற்றும் கேட்கும் கேள்விகளால் இவர்களது யோக்கியதையை வெளியாக்கும் ஜனங்களும், இவர்களுக்கு ஓட்டுப்போட்டு சட்ட சபைக்கு அனுப்புவார்களா? பொதுஜனங்களே யோசித்துப் பார்க்கட்டும்.

### ஸ்ரீமான்

### எம். ஆர். என். காளிங்கராயர்.

திவான்பகதூர் ஊத்துக்குளி ஜமீன்தார் அவர்களின் புத்திரரான ஸ்ரீமான் எம். ஆர். என். காளிங்கராயர் அவர்கள் லண்டன்மாநகரில் தம் வித்தியாப்யாசப் பயிற்சி முடிந்த பிறகு மீண்டும் சென்னைக்குநேற்று வந்தடைந்தார். இவர் உயர்தர கல்வியில்கேம்பிரிட்ஜ்பட்டம்பெற்றிருக்கிறார். சுமார் நாலரை வருஷகாலம் இங்கிலாந்தில் மகா உன்னதமாகப் படித்து வந்தார். ஜமீன்தாரர்களுக்குள் இவர் ஒருவரே முதன் முதல் இங்கிலாந்திற்கு உயர்தரக் கல்வியில் பட்டம் பெறச் சென்றவர். தம் வாழ்நாளில் இவர் உயர்ந்த படிப்புக்கு ஏற்றவாறு சீரும் சிறப்பும் பொருந்தி உன்னத ஸ்திதியில் இருக்கப் பெரிதும் விரும்புகின்றோம்.

மஹாஜன நேசன்.

---

## சுயராஜ்யக் கட்சிக்கு ஆரம்பத்திலேயே தோல்வி.

### 'முதற்கோணல் முற்றிலுங்கோணல்'

டில்லியில் நடந்த இந்திய சட்ட சபைத் தேர்தலுக்கு சுயராஜ்யக் கட்சியின் பேரால் ஜனுப் அஸப் ஆலியும் சுயேச்சைக்கட்சியின் பேரால் ஸ்ரீமான் ரங்கவிஹாரிலாலும் அபேக்ஷகர்களாய் நின்றது வாசகர்கள் தெரிந்திருக்கக் கூடும். அதற்காக நான்கு நாளைக்கு முன்னால் நடந்த தேர்தலின் முடிவைப் பற்றி "சுதேசமித்திரன்" டில்லியில் முதலாவது வெற்றி யென்றும், லாலாஜி கட்சிக்குத் தோல்வி யென்றும், ஜனுப் அஸப் ஆலி தேர்ந்தெடுக்கப் பட்டார் என்றும் பெரிய தலைப்புகள் கட்டி எழுதிவிட்டது. ஆனால் "மித்திர" னுக்கு கிடைத்த தந்தி சமாசாரம் மறுநாளே பொய்யாய்விட்டது. அதாவது சுயராஜ்யக் கட்சியால் நிறுத்தப்பட்ட அபேக்ஷகரான ஜனு அஸப் ஆலி தோல்வியடைந்து விட்டாரென்றும் லாலாஜி கட்சியாரால் நிறுத்தப்பட்ட ஸ்ரீமான் ரங்கவிஹாரிலால் வெற்றி பெற்றாரென்றும் சமாசாரம் வந்ததை "மித்திரன்" வெகு துக்கத்தோடு பிரசுரித்திருக்கிறான். ஆதலால் முதல் முதல் ஏற்பட்ட தேர்தலிலேயே சுயராஜ்ய கட்சிக்கு தோல்வி ஏற்பட்டிருக்கிறது. இனி வரிசைக்கிரமமாய் நடக்க வேண்டியதுதான்.

### கோவை ராமநாதபுரம்.

தேவேந்திர குல வாலிபர்கள் சன்மார்க்க சங்கத் திறப்பு விழாக் கொண்டாட்டம் அட்சய-ஹூ ஐப்பசி-மீ 8-உ கோவை லண்டன் மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் சி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளையவர்கள் தலைமையின் கீழ் சிறப்பாய் நடைபெற்றது. அவ்வமயம் திருவாளர்கள் பாலசுந்தரம் பிள்ளை பி. எம். ஆர். மாணிக்க சுந்தரம் செட்டியார், சி. பி. முத்துசாமி செட்டியார் ஆகிய கனவான்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்களென காரியதரிசி அறிவிக்கிறார்.


நம்பிக்கையான

வியாபார ஸ்தலம்.

சகல விதமான புஸ்தகங்கள்
கதர் துணிகள் மருந்துகள்
கடிகாரம் ஷரட் சாமான்
முதலிய இதர எல்லா
சாமான்களும்
கிடைக்கும்
முன்பணத்துடன் ஆர்டர்
அனுப்பவும்.

விலாசம்:—

என். தண்டபாணி
கம்பெனி.
தபால் பெட்டி 292.
6–99 பவழக்காரத்தெரு,
சென்னை.

## ஆஸ்திரேலியாவில் கோவை ஸ்ரீமான் ஷண்முகம் செட்டியார்

‘ஸிட்னி மார்னிங் ஹெரால்டு’ பத்திரிகைப் பிரதிநிதிக்குப் பேட்டிக் கொடுத்துப் பேசிய விவரம்.

ஏகாதிபத்ய பார்லிமெண்டு பிரதிநிதி கோஷ்டியில் இந்தியாவின் பிரதிநிதியான ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் தற்சமயம் ஆஸ்திரேலியாவில் இருக்கிறார். ‘ஸிட்னி மார்னிங் ஹெரால்டு’ பத்திரிகையின் பிரதிநிதிக்கு அவர் பேட்டி கொடுத்துப் பேசிய விவரங்களை நமது கோயமுத்தூர் நிருபர் அனுப்பியிருக்கிறார். ஸ்ரீமான் செட்டியார் தமது சொந்த நாட்டினிடத்தில் எவ்வளவு அபிமானம் கொண்டிருந்தபோதிலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தினிடத்தில் அவருக்குள்ள அன்பு அதனால் பாதிக்கப்படவில்லை யென்றும், சுய நிர்ணய சுதந்திரம் இந்தியாவுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று ஸ்ரீமான் செட்டியார் பலமாக வற்புறுத்துவதாகவும், அழகான தெளிவான பாஷையில் அவர் தம் அபிப்பிராயங்களை வெளியிட்டதாகவும் ‘ஹெரால்டு’ பத்திரிகை எழுதியிருக்கின்றது.

ஸ்ரீமான் செட்டியார் பேட்டி கொடுத்ததைப் பற்றிய விவரம் பின்வருமாறு வருணிக்கப்பட்டிருக்கிறது,—

ஸ்ரீமான் செட்டியார் ஸ்வராஜ்யக் கட்சியின் பிரதான ஒருவர். அக்கட்சியின் தத்துவத்தை அவர் எடுத்துரைக்கையில், “இந்தியா சுய ஆட்சியடையவேண்டு மென்பதே தனது கட்சியின் கோரிக்கை. தனது கட்சியைத்தவிர மிதவாதக் கட்சி ஒன்று இந்தியாவில் இருக்கிறது. இரண்டு கட்சியின் லட்சியமும் ஸ்வராஜ்யந்தான்; ஆனால் தங்கள் கட்சியார் தீவிர ராஜ்ய வாதிகள்; இந்தியாவின் அரசியலை நிர்ணயிக்கும்போது இந்தியா அதில் பிரபலமான பங்கெடுத்துக் கொள்வது சாத்தியமாக வேண்டுமென்று தங்களது கட்சி விரும்புகின்றது. ஆஸ்திரேலியாவில் அப்படித்தான் நடந்தது” என்று சொன்னார். காங்கிரஸ் மகா சபையும் தனது கட்சியும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து அறுத்துக் கொள்ள விரும்புவதாக ஒரு தப்பு அபிப்பிராயம் இருந்து வருவதை அவர் எடுத்துக் காட்டி, பெறுப்பேற்ற எந்த ராஜீய வாதியும் அவ்வாறு கூறவில்லையென்றும், ஆனால் இந்தியா மற்ற உறுப்புகளுக்குச் சமானமான அந்தஸ்தை ஏகாதிபத்தியத்தில் அடைந்திருக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்.

“இந்தியாவில் பல ஜாதிகள், மதங்கள், சமூகங்கள் இருக்கின்றன; எல்லாவற்றையும் ஒரே ஜாதியாகச் செய்து விடுவது எக்காலத்திலும் முடியாது. ஆனால் ராஜீய அபிவிருத்திக்குப் பல ஜாதிகளும் மதங்களும் இருப்பது ஒரு தடையாகாது. ஜாதியாச்சாரக் கட்டுப்பாட்டின் மிடுக்கு வரவரத் தளர்ந்து வருகிறது. தாழ்ந்த வகுப்பினரைக் கைதூக்கிவிட மகாத்மா காந்தி ஓர் இயக்கத்தை உண்டு பண்ணியிருக்கிறார். ஆகையால் காலக்ரமத்தில் அக்குறைகள் நிவர்த்தியாகி விடும். இந்தியர் பொதுவாக சகிப்புத் தன்மையுடையவர்கள்; ஜாதி வித்தியாசங் காரணமாக பிரமாதமான கலகங்கள் விளைவதில்லை. சமீபத்தில் ஹிந்து முஸ்லீம்களுக்குள் கொஞ்சம் பிணக்குண்டு; ஆனால் அது மதச்சண்டையல்ல; ராஜீயக் காரணங்களால்தான் அவை உண்டாகின்றன. பிற்காலத்தில் அரசியல் மாறினால் தங்கள் அந்தஸ்து என்னவாகுமோவென்று சிறுபான்மை சமூகத்தினர் பயப்படுகிறார்கள்” என்று ஸ்ரீமான் செட்டியார் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்னவென்று அவரைக் கேட்டதற்கு, அவர் சிரித்துக்கொண்டு பின்வருமாறு பதிலளித்தார்:—“ரயில் வண்டியில் பிரயாணம் செய்ததைத் தவிர வேறொன்றையும் நான் இன்னும் பார்க்க வில்லை. ரயில் வண்டியின் ஜென்னல் வழியாகப் பார்த்த போது, சுற்றுப்புற மெல்லாம் காலியாகக் கிடந்தது. தேசத்தில் ஒன்றுமே யில்லை போல் காணப்பட்டது; ஆனால் காட்சி அழகாயிருந்தது. மரியாதையாகவும் நேசபாவமாகவும் ஆஸ்திரேலியர் பழகுகிறார்கள் அவர்கள் உற்சாக புருஷர்களா யிருக்கிறார்கள். ஆஸ்திரேலியரைக் காணும்போது என்னுடைய சொந்த தேசத்தின் ஞாபகம் வருகிறது” என்றார். அமெரிக்கா நீங்கலாக வேறெந்த நாட்டையும்விட ஆஸ்திரேலியா சுபிட்சமானதென்று அவர் அபிப்பிராயப்பட்டார். ஆஸ்திரேலியா வெள்ளைக்காரர்களுக்கே ஏற்பட்டதென்ற கொள்கையை அவர் ஆட்சேபிக்கவில்லை யாயினும், அங்குள்ள சொற்ப இந்தியர்களை நன்றாக சம அந்தஸ்துக் கொடுத்து நடத்த வேண்டுமென்று அவர் பலமாக அபிப்பிராயப்பட்டார். அவ்வாறு செய்தால் ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்கும் நேசபாவமான சம்பந்தம் பெருகுமென்று அவர் சுட்டிக் காட்டினார்.

## சொற்பொழிவைக்கண்டு மயங்கி விடவேண்டாம்.

### வேறு ஜில்லாவாசி கூடாது.

சமீபத்தில் திருவண்ணாமலையில் தேர்தல் விஷயமாக ஒரு கூட்டம் கூடிற்று. அச்சமயத்தில் சேலம் ஸ்ரீமான் டி. ஆதிநாராயண செட்டியார் கீழ்கண்டவாறு பேசியதாக “சுதேசமித்திரனிலும்” தமிழ் “சுயராஜ்யா”விலும் காணப்படுகின்றது. “நான் தேர்தல் விஷயமாக பல இடங்களிலும் சென்ற சில காலமாகச் சுற்றிவருகின்றேன். நான் ஸ்ரீமான் டி. ஆர். ராமச்சந்திர அய்யர் பிரஸ்தாபத்தைப்போன்ற ஒரு இயக்கம் இருப்பதாக அறியவே இல்லை. நான் வடஆற்காடு ஜில்லாவாசியல்ல. ஒருகாலம் சேலம் ஜில்லாவுடன் வடஆற்காட்டின் ஆம்பூர் முதலியவை இணைக்கப்பட்டிருந்தபோது நானும் வடஆற்காடு ஜில்லாவாசியென்று சொல்லிக் கொள்ளும்படியான பாத்தியத்தைப் பெற்றிருந்தேன் என்று உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன். இந்தமாதிரி இயக்கம் ஒன்றிருப்பதென்று நானறிவது இங்குதான் என்று தெரிகிறது.” வாக்காளர்களே! சேலம் செட்டியார் எப்படியாவது வடஆற்காடு ஜில்லாவுடன் சம்பந்தம் உண்டென்று சொல்லியும், வெளி ஜில்லா வாசிகள் கூடாது என்ற இயக்கம் இருப்பதாகக் கேள்விப்படுவது இதுதான் முதல் தடவை யென்று சொல்லி மயங்குகின்றார். ஆம்பூர், சேலம் ஜில்லாவில் சேர்ந்திருந்ததால், வடஆற்காடு ஜில்லாவாசி என்ற பாத்தியதையைக் கொண்டாடுகிறார். வடஆற்காடு ஜில்லாவுடன் சேலம் சேர்ந்திருந்தால் அவரை வடஆற்காடு ஜில்லாவாசி எனக்கூற இடமுண்டு. ஜில்லாவாசிகளே சட்டசபைக்கு நிற்கவேண்டும் என்கிற கிளர்ச்சி புதிதாக இருக்கின்றதாம். இதற்கு முன்னேயே இக்கிளர்ச்சி இருக்கிறதென்று, ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சொல்வதுபோல் கைதூக்கும் ஸ்ரீமான் செட்டியார் இதை அறியார்போலும். தன் ஜில்லாவைவிட்டு, வெளி ஜில்லாவில் நின்று சட்ட சபைக்குள் புகுந்து அவர் தன்னுடைய சுய நலத்திற்கும், சொல்வது ஒன்றும் செய்வது ஒன்றாகவும் உள்ள கொள்கையற்ற சுயராஜ்யக் கக்ஷியைப் பலப்படுத்தியும் அதனால் பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பதுமல்லாமல் சட்டசபையில், பிராமணர் சொல்வதுபோல கூத்தாடுவார் என்பதும் நிச்சயம்.

ஆகையால் வாக்காளர்களே! “எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவமென்பது இழுக்கு.” என்று தெய்வப்புலமைவாய்ந்த திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்தருளியதுபோல் நன்றாக ஆராய்ந்து நம் ஜில்லாவாசிகளாகிய ஸ்ரீமான்கள் ஏ. என். பரசுராம நாயக்கர், கரார். கிருஷ்ணசாமி நாயுடு, குடியாத்தம் பீ மாராஜ ராஜ முதலியார் ஆகிய இவர்களையே தேர்ந்தெடுத்தனுப்புதல்வேண்டும். நம் ஜில்லா முன்னேற்றமடைந்தால். இதைப்போல் மற்ற ஜில்லாக்களும் முன்னடைந்தால், மாகாணமும் நம் நாடும் தானாகவே முன்னடையும். நம் ஜில்லா, நம் ஜில்லாவாசிகளின் மூலமாக முன்னேற்றமடையுமேயொழிய சேலம் செட்டியாரைப்போன்ற வெளி ஆசாமிகளால் முழுப்பயனையும் அடையாது என்பது நிச்சயம். ஏதோ பொதுஜனசேவையைக்குறித்து அவர்களை அழைத்தால் “எனக்கு உடம்பு சௌக்கியமில்லை, வரமுடியாததற்கு வருந்துகின்றேன்.” என்றும் “நான் வெளியில் சில அவசர காரியமாகச் செல்ல வேண்டி இருக்கின்றது. ஆகையால் வராததைப்பற்றி மன்னிக்கவும்.” என்று கடிதங்கள் எழுதிவிடுவது அவர்களிடம் சகஜமாகிவிட்டது. ஆகையால் வேறு ஜில்லாவாசியைத் தேர்ந்தெடுத்துவிட்டுப், பிறகு ஆற்காடு வாசிகளைப்போல விழிப்பதில் யாதும் பயனில்லை. ஆகையால் ஓட்டர்கள் ஒவ்வொருவரும் முன் எச்சரிக்கையாக இருந்து வெளி ஜில்லாவாசிகளை ஆதரிப்பது தங்களுடைய கடமையாகும் என ஆற்காடு ஸ்ரீமான் ஷடாக்ஷரம் எழுதுகின்றார்.

# தீண்டப்படாதவர்களே! எழுங்கள் ஜாதிக்கொள்கையைத் தொலைக்க!

## காந்தியடிகள்.

"எவ்வளவு காலம்," தீண்டாமையை மதத்தின் ஒரு பாகம்போல, ஹிந்துக்கள் வேண்டுமென்று பிடிவாதமாகக் கருதிவருகின்றார்களோ, எவ்வளவு காலம் ஹிந்துமதப் பொது ஜனங்கள், அம்மதத்தைப் போற்றும் ஒரு சகோதர சமூகத்தைத் தீண்டுவது பாவமெனக் கருதி வருகிறார்களோ, அதுவரையிலும் நாம் சுயராஜ்யமடைய முடியாது. தருமபுத்திரர் தன்னுடன் கூடவந்த நாயை விட்டு விட்டு தனியே ஸ்வர்க்கம் புகமாட்டேன் என்று மறுத்திருக்கிறார். தருமபுத்திரர் மரபில் தோன்றியவர்கள், தீண்டப்படாதவர்களும் கூடவரப் பெறாதுபோனால் எவ்வாறு சுயராஜ்யமடைய முடியும்?

எந்தக் குற்றத்திற்காக நாம் கவர்ன்மெண்டை "சைத்தான்" என்று அழைக்கிறோமோ அதே குற்றத்தைத் தீண்டப்படாத சகோதரர்களுக்கு நாம் இழைக்கலாமா?

நாம் நமது சகோதரர்களை ஒடுக்கி அடக்கி யிருப்பதற்காகப் பழிக்குள்ளாயிருக்கிறோம். அவர்களை மார்பால் தவழ்ந்துபோக வற்புறுத்துகிறோம். அவர்களுடைய மூக்கைப் பூமியில் தேய்க்கும்படி செய்திருக்கிறோம். அவர்கள் ரயில் வண்டியில் உட்கார்ந்திருக்கும்போது, கண்களில் பொறிபறக்க கோபத்துடன் அவர்களை நெட்டித் தள்ளுகிறோம். இவைகளைவிட பிரிட்டிஷ் அரசாக்ஷி அதிகமாக என்ன கெடுதி செய்திருக்கிறது? நம்மிடமிருக்கும் இந்த அசுசியை நாம் உடனே அகற்றித் தீரவேண்டும். எது பரியந்தம் ஆதரவற்றவர்களையும் எளியோர்களையும் நாம் காப்பாற்றாமல் இருக்கிறோமோ, அல்லது எது பரியந்தம் இதர மனிதனுக்கு மனக் கசப்பு வருமாறு, செய்ய ஒரே ஒரு சுயராஜ்யக் கட்சிக்காரன் மட்டும் இருக்கிறானோ அது பரியந்தம் நாம் சுயராஜ்யத்தைப்பற்றி நினைப்பது வீண்.

சதையால் மூடப்பட்ட இவ்வெலும்புக் கூட்டில் என்னை இன்னும் இருக்கச் செய்திருக்கும் மகத்தான இச்சைகளாவன, தீண்டப்படாதவர்களின் விடுதலையும், கோசம்ரக்ஷணையுமே. இந்த இரு இச்சைகளும் நிறைவேற்றினால் சுயராஜ்யம் வந்துவிடும் இதில்தான் எனது மோக்ஷமும் பதிந்து கிடக்கின்றது."

மோ. க காந்தி.

## ஹிந்து சமுதாயத்தைக் கெடுக்கும் தீண்டாமை என்னும் மாசு ஒழிந்தால்தான் இந்தியாவுக்கு விமோசனம் உண்டு.

——(o)——

ஹே ஹிந்துக்களே!

நீங்கள் உங்களுடைய புராதன பழக்க வழக்கங்களை மறந்துவிட்டீர்கள்! உங்களுடைய மத மிலேச்சர்களிடத்தே கைகட்டி அடிமைகளாக நின்று வேலைசெய்து வருகிறீர்கள்! உங்களது புராதன தொழிலை நீங்கள் விட்டு விட்டு, பட்டவேட்டையும், பண வேட்டையும் ஆடும் இக்காலத்தில், மிருகத்திற்கும் கேவலமாக உங்களது சமூகத்தின் ஒரு பகுதியை நடத்துவது எந்த தெய்வத்திற்கு அடுக்கும்? ஆயிரக்கணக்கான ஹிந்துக்கள் பிறமதங்களைப் போற்ற நேர்ந்திருப்பது, உங்களுடைய ஜீவகாருண்ய மற்ற நடத்தையினாலன்றோ? ஹிந்துக்களே! தற்கொலை புரிந்துகொள்ளாதீர்கள்!!

து. ராமதாஸன்,
வர்த்தக குமாஸ்தா,
திருசிரபுரம்.

## ஸ்வாமிவிவேகானந்தர்

"தோழர்களே! ஜாதிச் சண்டை நிகழ்த்திக்கொண்டிருப்பதில் யாதொரு பயனுமில்லை அது என்ன நன்மை செய்யக்கூடும்? நம்மை வர வர அதிகமாகப் பிரித்துவிடும் நமது பலத்தை தினே தினே மட்டுப்படுத்தி இழக்கும்படி செய்துவிடும். மகத்தான அவமானத்தையும் தாழ்ந்த அந்தஸ்தையும் நமக்கு கொண்டு வந்து விடும். மலையாளப்பிரதேசத்தில் நான் பார்த்து வருவதைப்போன்ற புத்தி கெட்ட நிகழ்ச்சி உலகின்கண்உள்ள வேறு எந்தப் பாகத்திலாவது நாம் பார்க்கமுடியுமா? ஏழ்மையான பறையன் உயர்ந்த ஜாதி மனிதன் போகும் ரஸ்தாவில் போகவிடப்படுகிறதில்லை. ஆனால் அவன் தன்னுடைய பெயரை "டஸ் புஷ்" என்ற ஒரு ஆங்கிலேய பெயராக மாற்றிக்கொண்டு விடுவானானால் உடனே அவன் அங்குபோக லாயக்குள்ளவனாக ஆகிவிடுகிறான், அல்லது அவன் ஒரு முஸல்மானியப் பெயரை வைத்துக் கொண்டாலும், அவனுக்குற்ற தீண்டப்படாத தோஷம் தொலைந்து விடுகிறது இதிலிருந்து மலையாளவாசிகளெல்லோரும் பைத்தியகாரர்களென்றும் அவர்களுடைய வீடுகளெல்லாம் பயித்தியக்காரர்களை போஷிக்கும் மடங்களென்றும் தான் நினைக்க வேண்டும். இவர்கள் தங்களுடைய வாழ்க்கையை உலகத்தார் விரும்புமாறு நடத்தாதிருப்பதோடு பிறரையும் நசுக்கிக் கொண்டுவரும், பரியந்தம் இந்தியாவிலுள்ள இதர வகுப்பினர் இவர்களை பயித்தியக்காரர்கள் என்று நினைக்க நியாயமில்லையா? மெய்யறிவு பெறும் வரையிலும், தீண்டப்படாதவர்களை செவ்வனே நடத்த முன்வரும் வரையிலும் மலையாளிகளுக்கு உலகத்தார் யாதொரு தாக்ஷிண்யமும் காட்ட வேண்டியதில்லை இந்தக் கொடூரமான, உடல் நடுங்கும் தன்மை வாய்ந்த வழக்கங்களை நிலை நிற்கச் செய்வது வெட்கம்! வெட்கம்!! சொந்த சகோதரர்களைப் பட்டினி கிடந்து உயிர் துறக்கச் செய்துவிட்டு அவர்கள் பிறமதங்களை சேர்ந்த உடனே சோறு போட்டு போற்றும் நமது வழக்கம் என்ன வழக்கம்! வெட்கம்! வெட்கம்!! இனி ஜாதிவித்தியாசம் தலைகாட்டவே கூடாது."

விவேகானந்தர்.

## பார்ப்பன துரோகம் அனுபவ சாக்ஷி.

தொன்று தொட்டு பார்ப்பனிய அடிமைத்தனத்தில் உழன்றுவரும் இப்பரத கண்டத்து மக்களுக்கு, விசேஷமாய் தமிழ் மக்களுக்கு "குடி அரசு" என்னும் பத்திரிகை தோன்றினது விடுதலை யென்னும் சூரியன் உதயமானதைப் போலாகும். ஆனால் இதற்கு முன்னர் பெரியார்களான ஸ்ரீமான்கள் டாக்டர் நாயரும் ஸர். பி. தியாகராயரும் மற்றும் முன்னோர்களும் எழுப்பின "பார்ப்பனரல்லாதார்" என்னும் கிளர்ச்சியினால் வகுப்புவாரி பிரதிநிதித்துவம், இன்னும் நன்மைகள் பல ஏற்பட்டிருந்த போதிலும் அதன் கொந்தளிப்பு வரவர குறைவு பட்டு சக்தியற்ற நிலைமையிலிருக்கும்பொழுது அரசியல் துறையில் வெகு காலமாய் இறங்கி தம் ஆள் பெருக்கத்துடன் விடா முயற்சியாய் உழைத்துவரும் அரிய பெரிய தமிழ் சிரோமணிகளான ஈ. வெ. ராமசாமி நாயக்கர், டாக்டர் வரதராஜுலு நாயுடு, இன்னோரன்ன பெரியோர்களும் மேற் கூறியுள்ள கிளர்ச்சிக்கு திரும்ப உயிர் கொடுத்து, பார்ப்பனியம் என்னும் வலையில் அகப்பட்டு தவித்துக் கொண்டிருக்கும் தமிழ் மக்களை ரக்ஷிக்க வந்து தற்போது அவர்கட்கு மெய் ஞானத்தைப் புகட்டி வருகிறார்கள். அந்தோ! இந்திய மக்களே! இது எவ்வளவு சிறந்த வழியம்! பாரத மக்களுக்குக் கிடைத்த பெரும் பாக்கியம்! எவ்வாறு மேற்கண்ட பெரியார்களுக்கு ஊக்கமளித்து செலுத்த முன் வருவீர்?

ஒன்று செப்புங்கள்; அதுவே போதும். 'குடி அரசு' என்னும்பேரொலியை, உங்கள் செவிபுறக்கேட்டு அனுபவ சாக்ஷியின் உண்மை இன்னதென்பதை உணருங்கள்: மெய்யாய் உணருவீர்களாயின், வருகிற சட்டசபைத் தேர்தல்களில் பார்ப்பனரல்லாதாருக்குத் தமிழ் மக்களுக்கே உங்கள் ஓட்டு உரிமையை பிரயோகம் பண்ணுங்கள்.

ஆங்கில அரசாட்சியில் உத்தியோகம் வகித்துக்கொண்டே எண்ணிறந்த பார்ப்பன வெள்ளையர்கள் எவ்வளவு தூரம் உங்களை அடிமைகளாக்கி யிருக்கிறார்கள் என்பதையும் அனுபவ சாட்சியாய் அறிவீர்கள்.

அது போகட்டும், தற்காலம் அரசியல் துறையில் இறங்கிவிட்டோம் என்று சொல்லிக்கொண்டு முன்வந்து நிற்கும் பார்ப்பனர்களின் நடத்தைகளையும், பத்திரிகைகளின் வாயிலாகவும், அனுபவத்தினின்றும் கண்டு அறிந்திருப்பீர்கள். அறிகம் தெரியாதிருப்பின் தற்காலம் சுயநல காங்கிரஸ் அல்லது சுயராஜ்யக் கட்சி என்ற துறையில் இறங்கியிருக்கும் பார்ப்பனர்களோடு நெருங்கி உறவாடி உழைத்துவந்திருக்கும் தமிழ் மக்கள் அவரையேனும் விசாரித்தறிந்துகொள்ளுங்கள். அப்போது பார்ப்பனர்களின் துரோகம் அனுபவ சாக்ஷியாய் ருசுவாகிவிடும்.

உஷார்! உஷார்!! உஷார்!!! தமிழ் மக்களே! சட்ட சபை தேர்தல்களை பார்ப்பனீய கோட்டையினின்றும் ரக்ஷியுங்கள்!

"இந்திய நேசன்"

4ம் பக்கத் தொடர்ச்சி.

அனுபோகம் கொள்வதில்லை. அப்பனுடைய வார்சு மகனுக்கே என்கிற ஒரு கல்வியைத் தவிர மகன் மதத்தைப் பற்றி யாவது சாஸ்திரத்தைப் பற்றியாவது படிக்க வேண்டுவதில்லை. அந்தந்த கோவில்களைப்பற்றி யுக்திக்கும் சாஸ்திரத் திற்கும் ஒத்துவராத மூடக்கதைகளை முட்டாள்தனமாக உளறத் தெரிந்தாலே மதம் சாஸ்திரம் தெரிந்தவனுகப் பாவிக்கப் படுகிறான். கோவில் எதற்காக கட்டப்பட்டது? தெய்வ பக்தியை எப்படி உண்டு பண்ணுவது? அதனுல் மோட்ச வழியை எப்படி காண்பிப்பது? கோவில் தெய்வம், பக்தி மோக்ஷம் என்பது என்ன? எதற்காக நாம் ஏற்பட்டிருக்கிறோம். என்பவைகளை கொஞ்சமும் அறியாமல் போய் விட்டார்கள். இதைப்பற்றின விஷயங்களனைத்தும் வாசகர்களுக்கே தெரிந்தமையானதால் விவரிக்காமல் நிறுத்தி விட்டேன்.

பணக்காரர்கள் தங்கள் நட்சத்திரம் வருநாளில் அர்ச்சனைசெய்ய ஒவ்வொரு கோவில்களிலும் கட்டளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒவ்வொரு அர்ச்சகனுக்கும் அநேகரிடம் அநேக கட்டளை உண்டு. வருடத்திற்கு ஒரு தரமோ இரண்டு மூன்று வருடத்திற்கு ஒருதரமோ வந்து பணம் வாங்கிப்போவான். சிலர் அனுப்பியும் விடுவார்கள். சில அர்ச்சகருக்கு வருஷத்தில் 2000, 4000 ரூபாய்கூட வருமானம் வரும். ஆனல் அர்ச்சனை மட்டும் செய்வதில்லை. அச்சடித்த காகிதமிருக்கிறது. குங்குமமும் விபூதியும் சுருட்டு ஜாதிக்கா பெட்டியில் மடித்தே வைத்திருக்கிறது. பட்டிகையில் கண்ட பேர்களுக்கு மாதா மாதம் அனுப்பி விடுவார்கள். அர்ச்சனை யென்பது 108 தரமோ 1008 தரமோ சுவாமியின் பெயரைச் சொல்லி, விபூதியோ குங்குமமோ சுவாமியின் பாதத்தில் போடுவது. அங்கு நிசமாகவே போட்டால் இங்கு இவர்கட்கு என்ன லாபமென்று கேட்டால், பக்தி இல்லாதவன் என்று ஒரே வார்த்தையில், கேட்டவனைத் தொலைத்துவிடுகிறார்கள். அர்ச்சகரே நீங்கள் பண வசூலில் பதினெரு மாதமுமிருக்கிறீர்களே அர்ச்சனை எப்படி நடக்கிறது என்று கேட்டால், அதற்கெல்லாம் ஆள் வைத்து வந்திருக்கிறேன் என்பார்கள். நம் வீட்டு காரியத்திற்கு சில பெரிய மனிதர்களைக் கூப்பிட நாம் போகாமல் ஆளோ காகிதமோ அனுப்பினுல் அவர்கள் கோபித்து நம் காரியத்திற்கு வருவதேயில்லை. பீஸ் வாங்கின ஒரு பெரிய வக்கீல் சின்ன வக்கீலை கோர்ட்டுக்குப் போகச் சொல்லி அவனும்போய் ஒன்றும் தெரியாமல் விழித்துவிட்டு கேசைக் கெடுத்துவிடுவது பிரத்தியட்சம். இதையெல்லாம் விட அர்ச்சகர்கள்செய்யும் புரட்டிலும் நம்மை ஆளாக்குகிறார் கடவுள். இந்தப்புரட்டும், விவரமில்லாத நாமுமில்லாவிட்டால் அர்ச்சகன் வீட்டு பொம்மைக் கலியாணத்திற்கு 500. 1000 எப்படிச் செலவிடுவது? இவைகளைத்தான் சாமியின் பேரால் செய்யும் புரட்டு என்று "குடி அரசு" சொல்லுகிறது. கோவிலிருக்குமிடங்களிலேயே தாசிகள் வீடும், விபசாரங்களும், கள்ளுக்கடை, சாராயக்கடை குத்தகை அதிகமுமிருக்கின்றன. காரணம் என்ன? பாடில்லாமல் பறிக்கும் பணமென்றால் பொருந்தாதா? சுவாமிக்குப் படைக்கப்பட்டதும் சாத்தப்பட்டதும் யார் வீட்டில் நிறைந்து கிடக்கிறது. அர்ச்சகர்களும் தாசிகளும் கோவில்களில் விளையாடும் வேடிக்கைகளில் நாமும் சேர்ந்து தமாஷ் பேசுகிறோம். அதைப் பார்த்துக்கொண்டிருக்கும் நம் மைனர்கள் அடுத்த தடவை தாசிகளில்லாமல் கோவிலுக்குப் போவதில்லை. கெட்ட பழக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள உற்சவாதிகளே காரணமாயிருக்கின்றன. இந்த உற்சவங்களில் கட்டளைகளும் பிராமண போஜனங்களும் ஆங்காங்குள்ள பணக்காரர்களால் செய்யப்பட்டும், மானியம் விடப்பட்டுமிருக்கின்றனவே அந்தகுடும்பங்கள் இப்பொழுது இருக்கும் நிலைமை என்ன. குடும்பப் பேர் சொல்ல ஆளுமில்லை. ஆள் இருந்தாலும் சோற்றுக்கில்லை. ஏழைச் சம்பள ஆளுக்கு ஒரு ரூபாய் அதிகமோ, பண்டிகைக்கு ஒரு வேஷ்டியோ கொடுக்க மனம் வராத பணக்காரன் அநேக பணத்தை திருப்பதி உண்டிகையில் போட்டுவிடுகிறான். தன் மரண காலத்தில் பக்கமிருந்து உழைத்த ஆளை மோசம் செய்து ஒரு பூமியை சாகையில் ஏதாவது ஒரு கோவிலுக்கு எழுதிவைத்து விடுகிறான். மகந்துக்கள் ஜலக்கிரீடை செய்வதற்கும் கோவிலில் பணம் திருடின கேசுகளுக்கும், தன் தாசியை இன்னொருவன் கைப்பற்றினான், என்கிற கொலைக் கேசுக்குந்தானே இந்த தர்மங்களெல்லாம் செலவிடப்படுகின்றன.

இந்த அக்கிரமமான செலவுகளை ஒழிப்பதற்கு ஒரு சட்டம் சட்ட சபையில் பாஸ் பண்ணிவைத்தால் அதை ஒழிக்க மடாதிபதிகளும் மகந்துக்களும் கோவில் சொத்திலேயே லட்ச லட்சமாக வக்கீல்களுக்கு கொடுக்கிறார்கள். வாங்கி இவர்களை ஏமாற்றும் வக்கீல்களோ நமக்கு சுயராச்சிய வாங்கிக் கொடுப்பவர்களாம். நாம் அறியாமையில் சுவாமி சுவாமி யென்று செலவு செய்யும் பணமெல்லாம் பாழாகுதே ஒழிய நமக்கு ஒரு பலனுமில்லை. இந்த மாதிரி சாமிக்குச் செய்த குடும்பங்களெல்லாம் பாழாயிற்றே ஒழிய முன்னுக்கு வந்த குடும்ப மேதாவதுண்டா? கோவிலிலிருந்து கொண்டுபிழைக்கும் ஒரு கூட்டத்தார் பொய்யும் புளுகும் கட்டிக்கொண்டே வருகிறார்கள். "திருப்பதியில் வெங்கிடாசலபதி ஒரு பையனுக வந்து பேசிக்கொண்டிருந்தார் பையனைப்பற்றி விசாரிக்கையில் மறைந்து போய் விட்டார் வட தேசத்திலிருந்து ஒருவன் உண்டிகை கொண்டு வந்தான் உண்டியலை போட நேரமாய்விட்டது. மயங்கி விழுந்து விட்டான் பின் அவன் மேல் போட்டிருந்த நகையெல்லாம் கழற்றி போட்ட பின் தான் மயக்கம் தெளிந்தது சீரங்கத்தில் விபூஷண ஆழ்வார் மாதா மாதம் வந்து பூசை செய்து விட்டுப் போகிறார் நாங்கள் போட்ட பூ காய்ந்து போய் விட்டது அவர் போட்ட பூ அப்படியே இருக்கிறது. அவர் விளக்கு அப்படியே எரிகிறது என்னும் கதைகள் புரட்டாசி மாதம் கடைசியிலும், பழனியில் மச்சக்காவடி வந்தது. பறந்து போய்விட்டது. பாம்புக்காவடி ஒன்று வந்திருக்கிறது சொப்பனம் உண்டாகி பால் காவடி கொண்டு வந்தான் ஒருவன் பால் பொங்கவில்லை நாக்கை அறுத்து வைத்து பாவாடம் கிடக்கிறான்" என்னும் கதைகளை தை மாதமும் ஐப்பசி மாதமும் கேட்கலாம் இதை நேரில் கண்டவர்களாவது விசாரித்து சரியாய் தெரிந்தவர்களாவது உண்டா? இல்லை. அவன் சொன்னான் இவன் பார்த்தானும். இதை உண்டு பண்ணுகிறவர்கள் கோவிலிலால் பிழைப்பவர்கள். கடவுள் சர்வ சக்தியுடையவர் என்பதில் எனக்குச் சந்தேகம் கிடையாது. அக்கடவுளை ஒரு சிறு செப்பிடுவித்தைக்காரனுகச் செய்து ஜனங்களின் விசாரணையின் அறிவைக்கெடுத்து இவைகளுக்கு செலவு செய்வதே உத்தமமான தருமமென்று மௌட்டீகத் திருப்தியில் கொண்டு வந்து, ஜனங்களும் தேசமும் முன்னுக்கு வரும் செலவிற்கு மனம் அலட்சியமடைந்து, கடவுளால் மனிதனுக்கு ஏற்படுத்தின கடமைகளை மறந்து நாமும் நம் தேசமும் பாழடைகிறோம் கோவிலில் விசேடங்களுக்கு போய் திரும்புபவர்கட்கு ஜ்வரமோ வாந்தி பேதியோ வாராமல் தடுக்க அந்தந்த சுவாமிகளுக்கும் சக்தி இல்லை; இம்மாதிரி யாத்திரைக்குப்போன விடத்தில் வியாதி கொண்ட பக்த கோடிகளுக்கு வாராத பக்த கோடிகள் உதவிபுரிவதுமில்லை. ஜீவகாருண்ணியத்தை முன்னிட்டாவது பாத்திரக்களிம்பு வியர்வை, பொடியோடு கூடின மூக்குச்சளி கீழு மேலுமுள்ள அரை அழுக்கு (ரிங்வாம்) என்னும் படையின் மேத்தோல் இவைகளை பதார்த்தத்தில் அர்ச்சகன் சேர்க்காமலுமிருப்பதில்லை கோவிலுக்குப் போய் வந்த வாசகர்களான உங்களுக்கு இன்னுமநேக விஷயங்கள் தெரியுமாதலால் அடுத்த வியாசத்தில் தீர்த்த யாத்திரையைப்பற்றி விசாரிப்போம்.

---

## கோயமுத்தூர் ஜில்லா ஓட்டர் கனவான்களுக்கு பட்டக்காரர் வேணு உடையாக் கவுண்டர் தெரியப்படுத்திக்கொள்வதாவது.

கனவான்களே!

1926-ஆம் நவம்பர்-மீ 8-உ திங்கள் கிழமை நடக்கும் சென்னை சட்டசபை தேர்தலுக்கு நமது ஜில்லாவின் சார்பாக நான் ஒரு பிரதிநிதியாக இருக்க விரும்புகிறேன். இந்த ஜில்லாவில் பெரும்பாலராக இருக்கும் நம்மவர்களுக்காக சட்ட சபையில் பிரதிநிதி இருக்கவேண்டியது அவசியம்; ஆதலால் என்னை அபேக்ஷகனுக இருக்கும்படி நம்மவர்களில் சில முக்கியஸ்தர்களும் மற்ற கனவான்களும் சொன்னதின் பேரிலும் சட்ட சபை மெம்பர் ஸ்ரீமான் வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்களும் என்னையே டி. மெம்பராக இருக்கவேண்டும் என்று சொன்னதின் பேரிலும் நான் டி. மெம்பர் ஸ்தானத்திற்கு நிற்கிறேன்.

ஆகையால் இந்த ஜில்லாவிலுள்ள எல்லோரும் தங்களுக்குள்ள மூன்று வோட்டுகளில் எனக்கு ஒரு வோட்டு கொடுக்கவேணுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு அன்புள்ள,
வேணு உடையாக் கவுண்டர்

# அசல் ஷண்முகம் பட்டணம் பொடி.

80 வருஷகாலமாக பிரசித்திபெற்றது இந்தியாவில் ஏராளமாய் விற்பனையாகிவருகின்றது,
ஆர். கே. பரிமள மூக்குத்தூள்

சுமார் 80 வருஷங்களுக்குமுன் மதராசில் முதல் முதல் தோன்றி உலகமெங்கும் புகழ்பெற்ற அசல் ஷண்முகம் மூக்குத்தூள் என்கிற பட்டணம்பொடியை உபயோகிப்பவர்களுக்கு ஆனந்தத்தையும் சுறு சுறுப்பையும் கொடுத்துவருவது அசல் ஷண்முகம் பொடியே 80 வருஷ காலமாக சென்னையிலே சிறப்புவாய்ந்து ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்றுடும் நூற்றுக்கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினந்தோறும் மெயிலில் பெற்று,ஜில்லா, தாலூக்கா,டவுன்,கிராமம் முதல் குக்கிரமங்களிலும் கொண்டாடி, வாடை குணம், மணம், கிராம், நிறம், அமையப்பெற்று, நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோபீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருகிறது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே. இனிமேலாவது ஏமாந்துபோகாமல் எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்! இன்புறுங்கள்!.

என். சாம்பசிவம பிள்ளை ஹெட்கிளார்க் கார்டிக் பேக்டரி, அருவங்காடு:—நான் 34 வருஷ காலமாக அசல் ஷண்முகம் பொடியை உபயோகித்து வருகிறேன் அதன்குணம் நாளது வரையில் கொஞ்சமாவது மாறுதல் கிடையாது.

கே. வி. ரெங்கசாமி அய்யர், வியாபாரி:—நான் 12 வருஷ காலமாக அசல் ஷண்முகம் பொடியை உபயோகித்துவருகிறேன். அது இதர பொடியைவிட குணத்திலும், மணத்திலும், உயர்ந்ததாக இருக்கிறது என்பது என்னுடைய கொள்கை.

கனவான்களே :—

எங்கள் கம்பெனி பொடியை இதர கம்பெனி பொடியோடு சற்று ஒப்பிட்டுப் பாருங்கள். இதர கம்பெனி பொடியை ஓர் சிட்டிகை எடுத்து சில நிமிஷம் வைத்துப் பார்க்கவும். மேற்படி பொடியில் மெடிக்கல் பதார்த்தம் சேர்ந்திருப்பதால் பொடியை சுற்றி வேர்த்து கருமை நிறமாகக் காணும். இவ்வித செயர்க்கையினாலேயே மேற்படி பொடிகள் ஒருவித எரிச்சலான காரமும் உடனே கெட்டுப் போகக் கூடியதுமா யிருககிறது. மேற்படி பொடி மூளைக்கு மிகவும் கெடுதல் உண்டு பண்ணும் என்பது நாம் சொல்லாமலே நன்கு விளங்கும். ஆனால் எங்கள் பொடியோ செயர்க்கையில்லாமல் இயற்கையாய் தன்னுடைய சுயகுணத்தைக் கொண்டே, யாதொரு கெடுதலையும் உண்டு பண்ணாமல் பொடி போடுவோருக்கு ஆனந்தத்தையும், ஆரோக்கியத்தையும், ஊக்கத்தையும், உற்சாகத்தையும், தருமென்பதும், எங்கள் அசல் ஷண்முகம் பொடியை ஒருதரம் போட்டுப் பார்த்தால் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும் என்பதற்கும் எங்கள் பொடியை மேலே சொல்லிய பிரகாரம் சோதித்தால் இரண்டுக்குமுள்ள வித்தியாசம் நன்கு விளங்கும்.

அசல் ஷண்முகம் பொடி விலை ஜாப்தா.

| | | |
|---|---|---|
| முதல்தரம் ஒரு வீசை | ... ரூ. | 4—4—0 |
| இரண்டாந்தரம் ஒருவீசை | ... ரூ. | 3—4—0 |

வெளி ஊர்களில் ஏஜண்டுகள் தேவை விலை விஷயம் இன்றைக்கே எழுதித் தெரிந்து கொள்ளவும்

இதனால் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைக்குத்தல் உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. காலனு சாதா மூக்குத்தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிகை மாத்திரம் கலந்தால் தூள் முழுதும் சுகந்தமாய்விடும்.

1 புட்டி 1-க்கு அணு 0—4—0 டஜன் புட்டிகள் ரூ. 2—4—0
ஒரு சேர் டின் ... ரூ. 1—8—0

ஹெட்டாபீஸ் :—ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி, லிமிடெட், போஸ்ட் பாக்ஸ் 140, மதருஸ்.

வெளியூர் பிராஞ்சுகள் :—மதுரை பிராஞ்சு நெ. 5. நகரா மண்டபம், அம்மன் சன்னதி, N. P. பரிமணம் பிள்ளை ஏஜண்ட்.
தேனீ பிரான்சு பெஜார் தெரு நெ. 6, வி. பி. ஷண்முகம் ஏஜண்ட்.
பொள்ளாச்சிபிராஞ்சு நெ. 7, முனுசாமிரெட்டி ஏஜண்ட் சந்தைக்கருகில்
பி. பி. வெங்கட்டராம செட்டியார், பி. பி. நாகரத்னம் செட்டியார் வியாபாரம், தாராபுரம்.
எம். பாபு சாஹிப் & பிரதர்ஸ், வியாபாரம், பல்லடம்.
கே. எஸ். கிருஷ்ணப்ப செட்டியார், ஏ. சுப்பிரமணிய செட்டியார் மளிகை, திருப்பூர்.
பி. நடராஜ பிள்ளை, 4/57, ரங்கே கவுண்டன் வீதி, கோயமுத்தூர்


## ஊழியர் கழகம்,

திருவிடைமருதூர்

---

### சொற்பொழிவு அழைப்புத்தாள்.

---

நிகழும் அட்சய ஆண்டு ஐப்பசித் திங்கள் 20-ம் நாள் (5-11-26) வெள்ளிக்கிழமை மாலை 4-மணிக்கு கடைவீதி ஆரபம்க் கல்விச் சாலையில் திரு. வி. சந்தானமய்யங்காரவர்கள் B. A. L. T. தலைமையின்கிழ் சொற்பொழிவு நடைபெறும்.

வெற்றிக்குரிய வழிகள் திரு. சு. மகாலிங்கய்யாவர்கள், எழுத்தாளர், தொழிற் கல்வி.

தீபாவளி வரலாறு திரு. க. சொ. பாலசுப்பிரமணியங் கவிராயரவர்கள் தமிழாசிரியர்.

ச. குமாரசாமி பண்டாரம்,
தலைவர்.

## மதுரை தேசிய கல்விச் சபையின்

மூன்றுவது
ஆண்டு நிறைவு விழா.

---

தெய்வத்திருவருளான், தேசியக்கல்வித் தொண்டாற்றிவருமிவ்வரிய கல்விச்சாலையின் மூன்றுவது ஆண்டு நிறைவுவிழா நாளது அட்சய-ஹு ஐப்பசி-மீ 15-உ (31-10-26) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மதுரை மேலச்சித்திரை வீதியில் தேசியக் கலாசாலை முன்பு பதுமைக் கம்பெனி ஸ்ரீமான்ரும். வீரணக்கோனரவர்களால் அமைத்த சிங்காரக் கொட்டகையின்கண் சென்னை சட்ட சபை அங்கத்தினரும் ஹைகோர்ட்டு வக்கீலுமான சென்னை நகர் ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் அவைத்தலைமையின்கிழ் நடைபெற்றதென எம். எல். இராமசாமி பிள்ளை (காரியதரிசி) அறிவிக்கிருர்.

---

## அரசங்குப்பம்

### சைவபரிபாலன சபை.

அட்சய-ஹு ஐப்பசிமீ 9-உ (25-10-26) திங்கட்கிழமை செய்யாறு தாலூகா நெ. 73. அரசங்குப்பம் கிராமத்தில் ஐயங்கார் குளம் வித்வான் ஸ்ரீமான் ஒதியப்பபிள்ளை அவர்களால் சைவ பரிபாலண சபை ஒன்று நிறுவப்பட்டது. இதன் நோக்கம் பிராமணீயத்தை ஒழித்தல் சைவசமயத்தை பரிபாலித்தல் முதலியனவாகும். இச்சபைக்கு சைவத் திருவாளர் குப்புசாமி பிள்ளையவர்கள் தலைவர் ஸ்ரீமான் வேதாலம் பிள்ளை காரியதரிசி என அரசங்குப்பம் ஸ்ரீமான் முத்துசாமி பிள்ளை அறிவிக்கிருர்.

### திருக்கோட்டியூர்

செங்குந்த மரபினர் முன்னேற்றங்கருதி அட்சய-ஹு ஐப்பசி-மீ 2-உ சிவகெங்கை வித்வான் ஸ்ரீமான் காசிவிஸ்வநாத பிள்ளை தலைமையில் ஒரு சங்கம் நிறுவப்பட்டது என திருக்கோட்டியூர் ஸ்ரீமான் செல்லையா முதலியார் அறிவிக்கிருர்.

தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற

**ராஜவைத்ய ஆஸ்ரமம்.**

சரஸ்வதி விலாசம் பிரஸுக்கு எதிரில் செவ்வாய்பேட்டை, சேலம்.

மேகரணங்கள், வெள்ளைவியாதி, ராஜபிளவை, கட்டிகள், நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆபரேஷன் இல்லாமல் சௌக்கியம் செய்யப்படும். விபரத்திற்கு எழுதுங்கள்.

ஆயிரக்கணக்கான

**மூலபவுத்ர வியாதி** யஸ்தர்கள்

சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.



குறைந்த வட்டி! மிகுந்த லாபம்!! சிறந்த பாங்கு!!!

கோயமுத்தூர்

## இந்தியர் கஷ்ட நிவாரணபாங்கு, (Ltd.)

(1924-ஆ டிசம்பர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.)

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் ... ... | ரூ. | 5,00,000—0—0 |
| வெளிவிடப்பட்ட பங்குகள் 7,390-க்கு... ... | ரூ. | 73,900—0—0 |
| தவணைகளின்படி வசூலிக்கப்பட்டது ... ... | ரூ. | 50,430—0—0 |
| டிபாசிட்டுகள் ... ... ... | ரூ. | 86,346—7—4 |
| Reserve Fund காப்புத் திரவியம் ... ... | ரூ. | 2706—0—0 |
| நடை முதல் தொகை ... ... | ரூ. | 1,50,275—9—5 |

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி விகிதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ்பிக்செட் டிபாசிட்டு இரண்டு வருஷ கெடுவே:—வட்டி 100-க்கு மாதம் 1க்கு 0—10—0 அணா. இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிட்டு ஒரு வருஷ கெடுவே:—வட்டி 100க்கு மாதம் 1க்கு 0—9—0 இதற்கு வருஷத்திற்கொருமுறை வட்டி கொடுக்கப்படும்.

(1) இப்பாங்கின் பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே, 100-க்கு மாதம் 1-க்கு ஒரு ரூபாய் வீதம் வட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது.

(2) பங்கு 1-க்கு 10 (பத்து ரூபாய்) வீதம், 10 பங்குகளுக்கு குறையாமல், 10, 20, 30 என்கிற முறையே, எத்தனை பங்குகள் வேண்டுமானாலும் கொடுக்கப்படும். பங்குகள் அலாட் செய்யும்போது பங்கு 1க்கு ஒரு ரூபாய் வீதமும் பிரவேசதனம் பங்கு 1க்கு 0—8—0 (எட்டணா) வீதமும் ரூல்ஸ் புஸ்தகத்திற்காக 0—6— அணாவும் செலுத்தவேண்டும்.

(3) பத்து பங்குகள் உடைய பங்குக்காரர், பர்ஸனல் இன்வெஸ்டுமெண்டு டிபாசிட் ஒன்றுக்காக, 25 மாதத் தவணைகளில் மாதம் 1-க்கு 2—0—0 (இரண்டு ரூபாய்) வீதமும் பிரவேசதனம் வாண்டுக்கிரயம் ரூபாய் 2—8—0 செலுத்தலாம், அல்லது ஒரே தடவையில் ஆம் ரூபாய 52—8—0 செலுத்தி விடலாம். ஒருவர் எத்தனை டிபாசிட்டுகள் வேண்டுமானாலும் செலுத்தி வரலாம்;

(4) மேற்கண்ட டிபாசிட்டுக்கு பூரா தொகையும் பிரதி வருஷம் டிசம்பர் மாதம் 31க்குள் செலுத்தப்பட்ட டிபாசிட்டுகளுக்கு, பிரதி வருஷத்திலும், மேற்படி நெம்பரை பிரைஸ் சீட்டில் சேர்த்து வாசிக்கப்படும்.

(5) மேற்கண்ட பிரைசில் பிரைஸ் கிடைத்த டிபாசிட்டருக்கு ஒவ்வொரு பிரைசுக்கும் ஐவ்வொரு டிபாசிட்டருக்கும், அவர் பங்குடையவரானால் ரூபாய் 250—0—0 தனி டிபாசிடரானால், ரூபாய் 125—0—0 இரண்டு வருஷ கெடுவிற்கு வட்டியில்லாமலும்,ஜாமீன் இல்லாமலும் கடன் கொடுக்கப்படும். டிபாசிட்டர்கள் இறந்து போனாலும், அவர் பங்கு உடையவரானால், ஒவ்வொரு டிபாசிட்டிற்கும் ரூபாய் 250—0—0 வீதமும் தனி டிபாஸிடரானால், ஒவ்வொரு டிபாசிட்டுக்கும் ரூபாய் 125—0—0 வீதமும், பாங்கின் சட்டப்புஸ்தகம் 3வது பக்கம் (ஆ) பிரிவின்படி போனசும் கொடுக்கப்படும்.

கோயமுத்தூர், 22—9—26.

ஜி. ராமச்சந்திர செட்டியார், மானேஜிங் டைரக்டர்.



ஸ்ரீவில்லிபுத்தூர்

**பி. பி. அன்ஸன்**

பிஸ்கட் பாக்டரி.

குழந்தைகளுக்குத்தகுந்தஆகாரம்

**அரரூட் பிஸ்கட்.**

சிற்றுண்டிக்கு முதன்மை பெற்றது.

**சூஸ்பரி பிஸ்கட்.**

புஷ்டியைக் கொடுக்கக் கூடியது.

**பழம் கேக்.**

எல்லா முக்கிய இடங்களிலும் கிடைக்கும்

P. P. & SON,
Cake & Biscuit Factory,
SRIVILLIPUTTUR.



ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது. உலகப் பிரசித்திபெற்ற

## மஹா சந்தனாதி தைலம்.

இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தைலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்ஸ். பாட்டல் ரூ. 2-2-0. வி. பி. சிலவு வேறு.

## சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.


இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவுள்ள ஆண்தன்மையை மிகுதிபடுத்துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக் கொடுத்து, தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும்.பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0 வி. பி. தபால் செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு திருச்சி.





பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்யாவும் விலையமாய் கிடைக்கும். கியாட்லாக் இனம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.



## ஜீர்ணமிர்தம்.

தங்கம் சேர்ந்த ருஜிகர ராஜ ஒளஷதம்.

அஜீர்ணத்தையும், மலச்சிக்கலையும் நன்கு கண்டித்து நல்ல பசியையும் ஜீர்ண சக்தியையும் தரும். தேகம் வலுபடும். பித்தம், இருமல், வயிற்றுப் பிசம், குத்தல், மூலம், பீனிசம், மார்பெரிச்சல், வாசம், புளியேப்பம், ஜ்வரகாசங்கள் முதலிய வற்றை உடனே குணப்படுத்தி விடும். நல்ல ரத்த விருத்தியையும் தேக புஷ்டியையும் தரும். டின் 1-க்கு ரூ. 1. டின் 2-வரை வி. பி. அணா 5.

பிரஜானுகூல ஒளஷதாலயம், ஸ்ரீரங்கம்.

# மின்சார ரசம்.

## எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

**மின்சார ரசத்தின் குணம் எப்படி?**

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது

**மின்சார ரசத்தின் விசேஷமென்ன?**

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமு மில்லை. எவ்வித பத்தியமு மில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

**மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?**

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.**

## மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.



வித்வத்வம்! அநுபவம்! ஆச்சரியம்! விநோதம்! ஆநந்தம்! விசித்திரம்! அற்புதம்!
இவைகளெல்லாம் அடைவது எப்படி?

எமது **"ஆநந்த குண போதினி."**

ஆநந்த குண போதினி அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்:—எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு.

வருஷ சந்தா:—இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1—0—0
மாதிரிப் பிரதி இனாம். வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0
சித்திரை மாதத்திலிருந்து வெளிவர் துலவுகிறது.

டி. இராஜகோபால் முதலியார்,
ஆநந்த குண போதினி ஆபீஸ், 302 தங்கசாலை வீதி, சென்னை.



ஆங்கிலேயம் படிக்க விரும்பும் கனவான்களே ஏன் கவலைப்படுகிறீர்கள்?
27000 ஜனங்களால் வாசித்து பிரபல்யமடைந்த

**ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி.**




தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 8-ம் பதிப்பு 800 பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது. இவ்வெட்டாம் பதிப்பில் மிகவும் சிரமப்பட்டு $1\frac{1}{2}$ ரூபாய் முதல் 3000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்கு போடப்பட்டிருக்கிறது.

முழு காலிகோ பயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0.
அந்நிய நாட்டார் முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. இராஜகோபால் முதலியார், நெ. 302, தங்கசாலைத் தெரு, மதறாஸ்.



பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

## மஹா சந்தனாதித் தைலம்

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!
வெயில் காலத்திற்கு மிகப்பயனுள்ளது!!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐகோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை எமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2-4-0. 6-அவுன்ஸ் 1-3-0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை



இனாம் இனாம்!!

## ரகஸ்ய ரத்னம்

அல்லது

**வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.**

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபாற் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற் பெட்டி 222, மதராஸ்.


கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. இராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.